★ பக்கங்கள் 6 விலை சதம் 40

# ஈழநாடு

The EELANADU

Registered as a Newspaper at the General PostOffice
Sri Lanka ... No. QB/89-5/78

மலர்: 21 மாசி 15 ரபி-அவ் 29 இதழ்: 17
யாழ்ப்பாணம் செவ்வாய்க்கிழமை 27-2-79

University of Sri Lanka ... Campus Library Periodicals Division Received 1979-2-27

## இந்திராவின் மகனும் மாஜி மந்திரியும் குற்றவாளிகள்

### இன்று தண்டனை வழங்கப்படும்

[புதுடில்லி]

முன்னாள் இந்திய ஒலிபரப்பு மந்திரி வி. ஸி. சுக்ளா மீதும் முன்னாள் பிரதமர் திருமதி இந்திரா காந்தியின் மகன் சஞ்சய் காந்தியின் மீதும் குற்றச்சதி, நம்பிக்கை மோசடி. திரைப்படச் சுருள் எரிப்பு ஆகிய குற்றச்சாட்டுகள் அனைத்திலும் குற்றவாளிகளாகக் காணப்பட்டனர்.

டில்லி நீதிபதி ஓ. எல். ஓரா முன்னிலையில் இவ்விசாரணை நடைபெற்றது.

முன்பு எம் பி.யாக இருந்த அமர்நாத நாத்தா முன்னைய ஆட்சியை அடிப்படையாக வைத்துத் தயாரித்த 'கிஷாகுஷ் மூக்கா' என்ற திரைப்படச்

[6-ம் பக்கம் பார்க்க]

# 3 தினங்களில் போர் நிறுத்தம்!

# சீன உதவிப் பிரதமர் அறிவிப்பு

## ஆனாலும் கடும் சண்டை நீடிக்கிறது மற்றொரு முக்கிய நகரும் சீனர் வசம்

ஹொங்கொங், பெப். 26

சீன - வியட்நாம் யுத்தத்தை சமாதானமாகத் தீர்த்துக்கொள்வதற்கு ஐ. நா, பாதுகாப்புச்சபை இரண்டு தினங்களாகக் கூடிப் பரிசிலனை செய்தும் எதுவித முடிவும் மேற்கொள்ளமுடியாத நிலையில் சீனவும் சோவியத் யூனியனும் ஏற்றுக்கொள்ளக்கூடிய ஒரு திட்டத்தைத் தயாரிக்கும் முயற்சியில் பாதுகாப்புச்சபை உறுப்பினர்கள் தனித்தனியாகக் கருத்துப்பரிவர்த்தனை செய்துகொள்வதற்காக ஒத்திவைக்கப்பட்டிருக்கிறது. இதேசமயம் எல்லைச்சண்டை இன்னும் மூன்று தினங்களுக்குள் நின்றுவிடுமென்று சீன உதவிப் பிரதமர் தெரிவித்துள்ளார். சோவியத் தலையீட்டுக்கான சாத்தியம் குறைவு என்றும் அவர் தெரிவித்திருக்கிறார்.

வியட்நாமிலிருந்து சீனத் துருப்புகளும், கம்போடியாவிலிருந்து வியட்நாம்படைகளும் திருப்பி அழைக்கப்படவேண்டுமென்று ஐ. நா. பாதுகாப்புச்சபையில் தெரிவிக்கப்பட்ட யோசனையைச் சீன ஏற்றுக்கொள்ளுமென்று சீனத் துணைப் பிரதமர் டெங்சியாபிங் கூறியதாக ஜப்பானியச் செய்தி நிறுவனமொன்று தகவல் வெளியிட்டிருக்கிறது.

வியட்நாமிலிருந்து சீனப்படைகள் திரும்புவதற்கு, கம்போடியாவிலிருந்து வியட்நாம் படைகள் விலகவேண்டுமென்பது நிபந்தனையாகமாட்டாதென்றும் டெங்சியாபிங் தெரிவித்ததாகவும், எனவே சீனப்படைகள் திருப்பி அழைக்கப்படக்கூடுமென்றும் அந்தச் செய்தி நிறுவனம் தெரிவித்திருக்கிறது.

### டொங்டாங்நகரும் சீனர்வசம்

இதேசமயம் சீனத் துருப்புகளுக்கும், வியட்நாம் படைகளுக்குமிடையில் நேற்றும் தொடர்ந்து கடும் சண்டை நடைபெற்றதாகவும், வியட்நாம் எல்லையில் மற்றொரு முக்கிய நகரான டொங்டாங் நகரையும் சீனர்கள் கைப்பற்றியுள்ளதாகவும் செய்திகள் தெரிவிக்கின்றன. இதை நவசீனச் செய்தி ஸ்தாபனமும் ஊர்ஜிதம் செய்திருக்கிறது எல்லையில் மேலும் இரண்டு லட்சம் சீனப் படைகள் குவிக்கப்படுவதாகவும் மற்றொரு செய்தி கூறுகிறது.

### ஹனோயைப் பிடிக்கும் எண்ணம் இல்லை

வியட்நாமில் கடும் சண்டை நடைபெறுச் சீனத் துருப்புக்கள் முன்னேறிச் சென்று கொண்டிருப்பதாகவும் வியட்நாம் தலைநகரான ஹனோய்க்கு 80 கிலோ மீட்டர் தொலைவில் சீனத்துருப்புகள் நின்று யுத்தம் புரிந்துகொண்டிருப்பதாகவும் வியட்நாம் துருப்புக்கள் எதிர்த்தாக்குதல் நடத்திக் கொண்டிருப்பதாகவும் செய்திகள் கூறுகின்றன இதேசமயம் ஹனோயைக் கைப்பற்றும் எண்ணம் சீனவுக்கு இல்லையென்று சீன உதவிப் பிரதமர் தெரிவித்திருப்பதாகவும் ஒரு செய்தி கூறுகிறது. சேத விபரம் பற்றி இதுவரை சீன எதுவும் தெரிவிக்கவில்லை.

### பூட்டோவின் தண்டனை பற்றி ஜனதிபதி ஹக்

(ராவல்பிண்டி)

பாகிஸ்தான் முன்னாள் பிரதமர் ஜுல்பிகார் அலி பூட்டோவின் தண்டனை, உயர் நீதிமன்றத் தீர்ப்பில்தான் தங்கிருக்கிறதென்று பாகிஸ்தான் ஜனதிபதி சியா உல் ஹக் தெரிவித்திருக்கிறார்.

### கச்சதீவில் இராணுவ உதவி

(கொழும்பு)

கச்சதீவுத் திருநாள் காலத்தில் சட்டவிரோதக் குடியேற்றம், கள்ளக்கடத்தல் ஆகியவற்றின் தடுப்பு நடவடிக்கையில் இராணுவம் உதவிபுரியுமென்று இராணுவத் தளபதி மேஜர் ஜெனரல் டெனிஸ் பெரேரா தெரிவித்தார்.

### ஏப்ரலிலிருந்து புதிய வரிமுறை!

[கொழும்பு]

ஏப்ரல் மாதத்திலிருந்து வருமானம், சொத்து, நன்கொடை ஆகியவைகள் சம்பந்தமான மதிப்பீட்டின் கீழ் புதிய வரி விதிப்பதற்கான சட்டமூலம் ஒன்று வரப்படவிருக்கிறது

வரி விதித்தல், வரி வசூலித்தல் ஆகியவை பற்றிப் புதிய சட்டமூலம் விளக்குவதுடன், தற்போதுள்ள வரித்திட்ட முறை பற்றிய சகல சட்டங்களையும் புதிய சட்டமூலம் இணைத்திருக்கும் இச்சட்டமூலத்தின் நோக்கங்கள், காரணங்கள் வர்த்தமானியில் வெளியிடப்பட்டுள்ளது.

## கச்சதீவுக்கு ஏலம், கராம்பு கொண்டுசெல்ல முடியாது!

### அணிந்து செல்லும் நகைகள் திருப்பிக் கொண்டுவரவேண்டும்

(யாழ்ப்பாணம்)

கச்சதீவுக்கு, திருமணமான பெண்கள் 5,000 ரூபா பெறுமதியான நகைகளும், திருமணமாகாத பெண்கள் 2000 ரூபா பெறுமதியான நகைகளும் கொண்டுசெல்ல அனுமதிக்கப்பட்டுள்ளனர். கச்சதீவுக்குக் கொண்டுசெல்லும் நகைகள் யாவும் திருப்பிக் கொண்டுவரவேண்டும்.

கச்சதீவு உற்சவம் தொடர்பான அரசாங்கச் சுற்றறிக்கை ஒன்றில் மேற்கண்டவாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

அந்தச் சுற்றறிக்கையில் மேலும் கூறப்பட்டிருப்பதாவது: கூடுதலான நகைகள் அணிந்துசெல்ல விரும்புபவர்கள், அதற்கான விசேஷ பெர்மிட்டை யாழ். சுங்கத் திணைக்களத்தில் பெற்றுக்கொள்ள வேண்டும்.

யாத்திரிகர்கள், தங்கள் சொந்தப் பாவிப்புக்காகச் சில பொருட்கள் கொண்டுசெல்ல அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

மதுபானம் எடுத்துச்செல்வதற்கு அனுமதிக்கப்படமாட்டாது.

2போத்தல் தேங்காயெண்ணை மட்டும் எடுத்துச்செல்லலாம்.

வியாபார நோக்கத்துடன் சமான்கள் கொண்டுசெல்வது

(6-ம் பக்கம் பார்க்க)

### படகுகளுக்கு லைசென்ஸ் வழங்கப்படுகிறது

(யாழ்ப்பாணம்)

கச்சதீவு செல்ல விண்ணப்பித்த யந்திரப்படகுகளுக்குத் தற்பொழுது அனுமதிப்பத்திரங்கள் வழங்கப்பட்டு வருகின்றன

கச்சதீவுக்கு யாத்திரிகர்களை ஏற்றிச் செல்லவிருக்கும் படகு உரிமையாளர்கள் அனுமதிப் பத்திரம் பெற விண்ணப்பித்திருந்தனர். படகுகள் பரிசோதனை செய்யப்பட்டு, தகுதியான படகுகளுக்கு அனுமதிப்பத்திரம் வழங்கப்பட்டு வருகின்றது.

கச்சதீவில், கடைகள், வியாபார நிலையங்கள் அமைக்க விரும்புகிறவர்கள், உடனடியாக விண்ணப்பம் செய்ய வேண்டுமெனக் கோரப்பட்டுள்ளனர் அடுத்த மாதம் 6-ம் திகதிக்கு முன்னர், இவர்கள் அனுமதிப்பத்திரம் பெற வேண்டும்.

கச்சதீவில், பொலிஸ் நிலையம், நீதிமன்றம், வைத்திய நிலையம், ஆகியவை அமைப்பதற்கான ஏற்பாடுகளும் செய்யப்பட்டு வருகின்றன.

[க-அ]

### இந்தியத் தளபதி இன்று வருகிறார்

(கொழும்பு)

இலங்கை இராணுவத் தளபதியின் அழைப்பின்மீது இந்திய இராணுவத் தளபதி மல்கோத்ரா இன்று இலங்கைக்கு உத்தியோக பூர்வ விஜயம் செய்கிறார்.

## வரி விளம்பரம்

### தேவை

பாலர் பாடசாலை ஆசிரியைகள் தேவை. சான்றிதழ் பிரதிகளுடன் சனிக்கிழமைக்கு முன் விண்ணப்பிக்கவும். பாலர் கல்விக்கழகம், 77, அரசடிவீதி, யாழ்ப்பாணம். 1760

1-3-79 இல் இருந்து மனேச்சராக கடமையாற்றுவதற்கு கணக்கு வைப்பதில் அனுபவமுள்ள ஆள்தேவை. நேரில் சான்றிதழுடன் தொடர்பு கொள்ளவும். தங்கும் வசதியுமுண்டு. உரிமையாளர் உள்நாட்டு வெளிநாட்டு குடிவகை நிலையம் 374, கண்டி றோட், சாவகச்சேரி. 1762

ஓர் இரும்புக் கடைக்கு மூலதனம் கொடுக்கக்கூடிய வசதியுள்ள பங்குத்தாரர்கள் தேவை, நேரில் விண்ணப்பிக்கவும். ஜெட்ஷன்ஸ் ஹார்ட்வெயர் ஸ்டோர்ஸ், 236, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம். 1765

### விற்பனைக்கு

3 ஸ்ரீ B. S. A 3 5—B-31 மொடல் மோட்டர் சைக்கில் உடன் விற்பனைக்குண்டு அமுதசுரபி வைத்தியசாலை, 553, கே. கே. எஸ் வீதி, யாழ்ப்பாணம். 1755

### தவறிவிட்டது

விசுவலிங்கம், கணேசலிங்கம் ஆகியோரின் உறுதிகளும் பர்மிட்டுகளும் காணிப்பட்டும் பஸ்ஸில் தவறிவிட்டது. கண்டெடுத்து தருபவர்களுக்கு தகுந்த சன்மானம் வழங்கப்படும். கந்தசாமி, 'புத்தக ஏஜண்டு', பஸ்நிலையம், கொடிகாமம். 1764

### கல்வி

2 மாத கட்டிட மின்னியல் வகுப்புக்கள் (Building Electrician Course) செய்முறைப் பயிற்சியுடன் ஆரம்பமாகவுள்ளன. விண்ணப்ப முடிவுத் திகதி 3-3-79. பயிற்சிகள் 5-3-79 இல் ஆரம்பமாகின்றன. I-A-R, 615, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் 1737

## அதிபர்கள் கோரிக்கை

[யாழ்ப்பாணம்]

உயர்வகுப்பு மாணவர்களின் கல்வி பாதிக்கப்படுவதால், வேலை நீக்கம் செய்யப்பட்ட சகல ஆசிரியர்களுக்கும் உடனடியாக வேலை வழங்குமாறு அரசைக் கோருவதென யாழ். மத்திய கல்லூரி மண்டபத்தில் நேற்று முன்தினம் கூடிய வடமாகாண அதிபர்கள் சங்கம் தீர்மானித்துள்ளது. ]கொ. நி[

## ஒரு ஆசிரியர்

[புலோலி]

ஐந்து வகுப்புகளைக் கொண்ட பாடசாலையொன்றில் ஒரு ஆசிரியர் மாத்திரம் கடமையாற்றுகிறார் பருத்தித்துறைத் தொகுதியில் உள்ள கட்டைக்காடு றோ. க. பாடசாலையிலேயே இந்நிலைமை இடம் பெற்றுள்ளது.

அண்மையில் இப்பகுதி அபிவிருத்தி நடவடிக்கைகள் கருதி ஆராய்வுக்கெனச் சென்றிருந்த பருத்தித்துறை எம். ப. திரு கே துரைரத்தினம் யாழ் மாவட்ட பிரதம கல்வியதிகாரி திரு என். ஆர் பாலசிங்கம், விஞ்ஞானக் கல்வியதிகாரி திரு வே. பொன்னம்பலம், பருத்தித்துறை வட்டாரக் கல்வியதிகாரி திரு. என். துரைசாமி ஆகியோரைக் கொண்ட கோஷ்டி இந்தச் சம்பவத்தை நேரிற் கண்டுகொண்டதாம்.

இதனையடுத்து இவ்வதிகாரிகள் கோஷ்டியினர் இப்பாடசாலைக்கு ஆசிரியர்களை அனுப்பி வைப்பதற்கு உடனடி நடவடிக்கைகளை மேற்கொள்வதாக உறுதியளித்துச் சென்றுள்ளனராம். (அ)

## இன்று வழக்கு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் நவீன மார்க்கட் வழக்கு இன்று காலை யாழ் மாவட்ட நீதிபதி ஜே ஜி ஆசீர்வாதம் முன்னிலையில் விசாரணை செய்யப்படவிருக்கிறது

இன்று காலை யாழ் மாவட்ட நீதிமன்றத்தில் தமிழ்க் காங்கிரஸ் வழக்கும் விசாரணை செய்யப்படும். [க]

## வெற்றுச்சாக்கு கேள்விப்பத்திர அறிவித்தல்

சுமார் 5,000 தரம்பிரிக்கப்பட்ட வெற்றுச்சாக்குகள் விற்பனைக்காக கேள்விப்பத்திரங்கள் கோரப்படுகின்றன. முடிவுத்திகதி 06-03-1979 செவ்வாய்க்கிழமை நண்பகல் 12-00 மணிவரை. கேள்விப் பணம் ரூபா 2/- செலுத்திக் கேள்விப்பத்திரங்கள் 01-03-1979 தொடக்கம் 05-03-1979 நண்பகல் 12-00 மணி வரை இச்சங்கக் காரியாலயத்தில் பெற்றுக்கொள்ளலாம். கட்டுப்பணம் ரூபா 250/- கேள்விப் பத்திரத்துடன் முடிவுதிகதி முன்னதாக ''பொதுமுகாமையாளர், தென்மராட்சி மேற்கு ப. நோ. கூ. சங்கம், கைதடி'' என்ற விலாசத்திற்குக் கிடைக்கக்கூடியதாக பதிவுத்தபால் மூலம் அனுப்பி வைக்கவும். தபால்உறையின் இடதுபக்கமேல் மூலையில் ''வெற்றுச்சாக்கு கேள்விப்பத்திர விண்ணப்பம்'' என எழுதப்படல்வேண்டும், காசோலைகள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.

**பொதுமுகாமையாளர்**
தென்மராட்சி மேற்கு
ப. நோ. கூ. சங்கம்,
கைதடி.
1979-02-24. 1757

## 1-ம் ஆண்டு நினைவாஞ்சலி

செல்வன்
செ. செல்வராசா



தோற்றம் :
5 - 2 - 57
மறைவு :
9 - 3 - 78

திதி வரும் 27-2-79 ஆகிய இன்று எமது அன்பின் உருவாகவும், பண்பின் செயலாளராகவும் இருந்து எம்மை விட்டு மறைந்தும் மறையாத நினைவுடன் வாழும் உமது தந்தை, தாயார், சகோதரர்கள், சுற்றத்தார் அனைவரும் உமது ஆத்ம சாந்திக்கு இறைவனை வேண்டுகிறோம்

செல்லத்துரை தம்பதிகள்
யாழ்ப்பாணம் கலட்டி
33/11, இராமநாதன் வீதி 1756

நொக்அவுட்போட்டி:-

## நாவாந்துறை சென்மேரிஸ் சாம்பியன்

[யாழ்ப்பாணம்]

யாழ் உதைபந்தாட்ட லீக்கினால் நடாத்தப்பட்ட நொக்கவுட் சாம்பியன் போட்டியின் இறுதியாட்டத்தில் நாவாந்துறை சென்மேரிஸ் கோஷ்டி பலம் பொருந்திய பாஷையூர் சென் அன்ரனிஸ் கோஷ்டியை 4-1 கோல்களால் தோற்கடித்துசாம்பியன் கிண்ணத்தைச் சுவீகரித்துக் கொண்டது

யாழ், துரையப்பா விளையாட்டரங்கில் நடைபெற்ற இப்போட்டிக்கு பிரதம விருந்தினராக வடபிராந்திய இ போ. ச தலைவர் திரு. கே அமரசிங்கம் கலந்து கொண்டு வெற்றி பெற்ற சென்மேரிஸ் கழகத்துக்கு வெற்றிக்கிண்ணத்தைப் பரிசாக வழங்கினர்.

ஆட்டம் ஆரம்பம் முதல் விறுவிறுப்பாக இருந்தும் இடைவேளைவரைஇருகோஷ்டிகளும் ஒருகோலும போடவில்லை சேன்மேரிஸ் கோஷ்டியினர் மிகத்துடிப்பாக ஆடி இடைவேளையின் பின்னர் 4 கோல்களைப்போட்டு வெற்றியைத் தமதாக்கிக் கொண்டனர் செ அமலதாஸ் பா பிரான்சிஸ் தோ மரியதாஸ் மணி ஆகிய மூவரும் சென்மேரிஸ் கோஷ்டியின் சார்பில் விளையாடிப் பொதுமக்களின் பாராட்டைப் பெற்றனர்.

சென்மேரிஸ் கோஸ்டிக்கு திரு நீ இராசாவும் சென் அன்ரனிஸ் கோஷ்டிக்கு திரு இ. மரியதாசும் தலைமைதாங்கினர். [வெ-அ]

க சி. முத்துக்குமாரசாமி
மனுதாரின் சட்டத்தரணி.

## பின்முற்றுக்கும் தீர்வையின் அறிவித்தல்

பருத்தித்துறை மாவட்ட நீதிமன்றில்

மரணசாதனம் முடியாமல் காலம்சென்ற கந்தப்பிள்ளை கைம்பெண் சிவக்கொழுந்துவின் சொத்துக்களின் விடயமாக.

கந்தப்பிள்ளை கைம்பெண் சிவக்கொழுந்து
—காலம் சென்றவர்.
கணபதிப்பிள்ளை வேலுப்பிள்ளை,
புலோலி தெற்கு, புலோலி.
—மனுதார்.

தத்துவ
நியாயாதிக்கம்.
இல; 1064

எதிராக
1. கந்தப்பிள்ளை மகள் சாந்தகுமாரி.
2. சதாசிவம் பெண் பார்வதி இருவரும், புலோலி தெற்கு.
—எதிர்மனுதாரர்கள்.

இத்தால் சகலருமறிக மேலே குறிப்பிட்ட இலக்க தத்துவ வழக்கு இம்மன்றினில் தாக்கல் செய்யப்பட்டுள்ளதென்றும் மேலே சொல்லிய காலம் சென்றவரின் சொத்துக்கள் நிர்வகிப்பதற்காக பின் முற்றுக்கும் தீர்வைபதியப்பட்டுள்ளது.

எனவே எவரேனும் இதில் அக்கறை உள்ளவர்கள் இந்த நீதிமன்றில் 1979-ம் ஆண்டு பங்குனி மாதம் 23-ந் திகதி முற்பகல் 9 மணியளவில் மன்றில் சமுகம் கொடுத்து பின் முற்றுக்கும் தீர்வை முழுத் தீர்வையாக ஏன் பதியக் கூடாது என்பதற்கு ஏதேனும் காரணமிருப்பின் அவைகளை சமர்ப்பிக்குமாறு வேண்டப்படுகின்றீர்கள்.

1979-ம் ஆண்டு மாசிமாதம் 19ந் திகதி.

மன்றின் கட்டளைப்படி.

க. விஸ்வலிங்கம்,
பதிவாளர்.

1763

## வியாபாரம் பெருக விளம்பரம் செய்க

புலோலிவயோதிபமாது கொலை:

# மேலும் இருவர் விளக்கமறியலில்

[புலோலி]

புலோலி 1-ம் கட்டையடி வயோதிப மாது கர்ம மரணம் சம்பந்தமாக மேலும் இருவர் விளக்க மறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

பருத்தித்துறைப் பொலிசார் இச் சந்தேக நபர்கள் இருவரையும் கைதுசெய்து பருத்தித்துறை நீதவான் திரு. கே. ஞானச்சந்திரன் முன்னிலையில் ஆஜர் செய்தபோது இருவரையும் விளக்க மறியலில் வைக்கும்படி நீதவான் உத்தரவிட்டார். இதுசம்பந்தமாக ஏற்கனவே இருவர் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளது தெரிந்ததே. [அ]

## கோட்டு விற்பனவு விளம்பரம்

யாழ்ப்பாணம் மாவட்ட நீதிமன்றம்
செல்லையா இராசசிங்கம், வேலணை கிழக்கு, வேலணை.
—வழக்காளி

இல. MB/ '4499

எதிராக
1 கார்த்திகேசு நாகராசாவும் பெண்
2 இராசம்மாவும், இருவரும் சரவணை.
—எதிராளிகள்

யாழ்ப்பாணம் மாவட்ட நீதிமன்றத்தின் MB/ 14499ம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக்கட்டளைப்படி பின்னால் விபரிக்கப்படும் ஒரு துண்டுக் காணியை 1979ம் ஆண்டு மார்ச் மாதம் 9ம் திகதி (9-03-1979) வெள்ளிக்கிழமை முற்பகல் 10 மணியளவில் அந்தக் காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் என்னால் விற்கப்படும்.

### தீர்வைத்தொகை

முதல்வட்டி ரூபா 1500/-ம் வழக்குச்செலவு ரூபா 250/- இதில் செலவால் ரூபா 250/- கழித்து.

### ஆதன விபரம்

வடமாகாணம் யாழ்ப்பாணம் மாவட்டம் தீவுப்பகுதி ஊர்காவற்றுறை கோவிற்பற்று சரவணை இறை நெய்க்கொட்டை உறுணி நில. பர 10ம் பத்தும் வேம்புகளும் இலுப்பையும் எல்லை கிழக்கு சின்னையா பெண் அன்னப்பிள்ளைக்கும் மறுபேருக்குமுரிய வாதனங்கள். வடக்கு ஒழுங்கை முகப்பும் மருதையினர் பாலசுப்பிரமணியத்தினுதனமும் மேற்கு சங்கரி ஐயம்பிள்ளைக்கும் பங்காளருக்கும் உரிய ஆதனம் தெற்கு சங்கரப்பிள்ளை பெண் ஆச்சிமுத்துவினுரிமைக்காரருக்கும் மறுபேருக்கும் உரிய ஆதனங்கள். இதடங்கலும். ஆனால் இக்காணியின் மேற்கு வடக்கு எல்லை ஓரமாக கிழக்கேயிருக்கும் ஒழுங்கை முகப்புக்கு இதன் தெற்கு மேற்கு எல்லைக்காரர் போக்குவரவு செய்ய விடப்பட்ட 5 முழ அகல ஒழுங்கை நிலம் புறநீங்கல்.

க. சிவஸ்கந்தா
நீதிமன்ற விற்பனை ஆணையாளரும்
மதிப்பாளரும்.

நாகேந்திரமடம்,
வட்டுக்கோட்டை.
31-1-79. 1758

## கோட்டு விற்பனவு விளம்பரம்

யாழ்ப்பாணம் மாவட்ட நீதிமன்றம்
கரம்பன், கரம்பன் கிழக்கு நம்பியல் பிள்ளை
கைம்பெண் ஆரோக்கியம்

இல. ஈடு/14487

வழக்காளி

எதிராக
ஊர்காவற்றுறை, சரவணை, புளியங்கூடல்
1. சின்னப்பு சரவணமுத்துவும் பெண்
2. புனிதவதியும்

எதிராளிகள்

யாழ்ப்பாண மாவட்ட நீதிமன்றத்தின் MB/14487 இலக்க வழக்கில் எனக்கு கிடைத்த கோட்டு கட்டளைப்படி பின்னால் விபரிக்கப்படும் ஒரு துண்டுக்காணியை 1979ம் ஆண்டு மார்ச் மாதம் 9ம் திகதி (9-3-1979) வெள்ளிக்கிழமை முற்பகல் 11 மணியளவில் அந்தக் காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் என்னால் விற்கப்படும்.

### தீர்வைத் தொகை

முதல் வட்டி ரூபா 7560-ம் 5-8-1974ம் ஆண்டு தொடக்கம் 14-11-1974 வரைக்கும் ரூபா 4000/- க்கு 12 வீத வட்டியும் அதன்பின்முழுத்தொகைக்கும்இறுக்கப்படும்வரை5% வட்டியும் கோட்டுச்செலவு ரூபா 652/85 தீர்வையயால் கொடுபட்டது. 18-9-1975 ரூபா 500/- 7-3-1977 ரூபா 1000/- 18-5-1977 ரூபா 1000/- 16-1-1978 ரூபா 2000/ 12-9-1978 ரூபா 2000/- செலவால் ரூபா 300 கழிக்கவும்.

### ஆதனவிபரம்

வடமாகாணம் யாழ்ப்பாண டிஸ்திறிக் தீவுப்பற்று ஊர்காவற்றுறை கோவில்பற்று சரவணை இறை குமலத்தனை நெற்பரப்பு 9 குளி 3 றுக் கல்வீடும் கிணறும் செய்பயிர் வான்பயிர்களும். எல்லை கிழக்கு: ஒழுங்கை. வடக்கு செல்லத்துரை பெண் பரிமளபாக்கியத்திற்கும் பாலசுப்பிரமணியம் பெண் நாகம்மாவிற்குமுரிய ஆதனங்கள். மேற்கு பாலசுப்பிரமணியம் பெண் நாகம்மாவிற்கும் மறுபெயருக்குமுரிய ஆதனங்கள். தெற்கு சுப்பையா கந்தையாவிற்குமுரிய ஆதனம் இதடங்கலும்.

க. சிவஸ்கந்தா
நீதிமன்ற விற்பனையாளரும்
ஆணையாளரும்

நாகேந்திரமடம்,
வட்டுக்கோட்டை,
31 01-79. 1759

# "இந்தோனேஷியரின் தமிழ் சமய ஆர்வத்தை நிறைவுசெய்ய உதவுங்கள்"

## உலகத்தமிழருக்கு ஆத்மஜோதி முத்தையா வேண்டுகோள்

(மீடான்)

"இந்தோனேஷியாவிலுள்ள மக்கள் தமிழையும், சமயத்தையும் கற்பதில் அதிக ஆர்வம் காட்டிவருகிறார்கள். அண்மையில் இங்குள்ள டாராத், அவுரி, பகண்டான், புலோபராயன், பிஞ்சை ஆகிய ஐந்துஇடங்களில் பாலர் பாடசாலைகள், முதியோர் வகுப்புகள் ஆரம்பிக்க பட்டுள்ளன. ஸ்ரீ முத்துமாரியம்மன் தேவஸ்தானத் தலைவர் திரு. எஸ் மாரிமுத்து நான்கு பாடசாலைகளைத் தன் பொறுப்பில் கட்டிக் கொடுத்திருப்பது பாராட்டத்தக்கதாகும்."

இவ்வாறு இலங்கை நாவலப்பிட்டி ஆத்மஜோதி நிலையத் தலைவர் திரு நா. முத்தையா மீடான் நகரில் பாலர் பாடசாலையைத் தொடக்கிவைத்து உரையாற்றுகையில் கூறினார்.

திரு. நா. முத்தையா இங்கு பாலர் பாடசாலைகளில் கல்வி பயிற்றும் ஆசிரியர்களுக்கான பயிற்சியையும் அளித்துவருகிறார். இங்குள்ள பள்ளிச்சிறார்கள் இந்தோனேஷிய மொழி மூலம் இந்தோனேஷியப் பாடசாலைகளில் கல்வி கற்பதோடு காலை-மாலை வேளைகளைப் பயன்படுத்திப் பாலர் பாடசாலைகளில் தமிழும், சமயமும் கற்றுவருகிறார்கள்.

திரு நா. முத்தையா உலகத் தமிழ் மக்களுக்கு விடுத்த வேண்டுகோள் ஒன்றில், "சைவமும் தமிழும் இரு கண்கள் என நாவலர் பெருமான் கூறினார். இந்தோனேஷியாவில் வசிக்கும் 4—7 வயதிற்கிடையிலான தமிழ்க் குழந்தைகள் தமிழைக் கற்பதன்மூலம் சைவ ஒழுக்கங்களைக் கடைப்பிடிக்கச் செய்ய வேண்டும் என்ற நோக்கத்தைக்கொண்டு கிராமங்கள் தோறும் பாலர் பாடசாலைகள் மீடான் ஸ்ரீ முத்துமாரி அம்மன் கோயில் நிருவாகத்தினரின் பெருமுயற்சியால் உருவாகிக்கொண்டுவருகின்றன.

"இங்கு தமிழ்ப் புத்தகங்கள் பெறக்கூடிய வாய்ப்பு இல்லை மக்களிற் பெரும்பாலோர் புத்தகங்களை வாங்கிக் கொடுக்கும் நிலையிலும் இல்லை. தமிழ் அச்சகங்களும் இல்லை. எனவே வெளிநாடுகளிலுள்ள தமிழபிமானிகள் முதலாம் வகுப்புத் தொடக்கம் ஐந்தாம் வகுப்பு வரையிலான தமிழ்ப் புத்தகங்கள், இந்துசமய பாடப் புத்தகங்கள், தமிழ் நெடுங்கணக்கு அட்டைகள், சொல் அட்டைகள் ஆதியன அனுப்பிவைத்தல் பல பிள்ளைகளுக்குக் கண்ணைத் திறந்துவிடும் பேறு பெற்றவராவீர்கள் உங்கள் குழந்தைகள் படித்துக் கழித்த புத்தகங்கள் இங்குள்ள பல பிள்ளைகளுக்குப் பயன் தரும்.

நீங்கள் அனுப்ப விரும்பும் நூல்களைப் பின்வரும் விலாசத்திற்கு அனுப்பி உதவுக

N Muthiah,<br>Sri Mariyamman Kovil,<br>Jalan Teukuumar No. 18<br>Med.n-Sumatara,<br>INDONESIA.

என்று குறிப்பிட்டுள்ளார்.

## இன்றைய பலன்

மாசிமாதம் 15-ம் திகதி

(27-2-1979)

செவ்வாய்க்கிழமை

மேடம்: உணர்ச்சிமயமான தினம். மனப்போராட்டங்கள் நடைபெறும். உடல் நலமும் பாதிக்கப்படாம். குடும்பத்தில் ஏற்படும் மோதல்கள் விரத்தி மனப்பான்மையை உருவாக்கும்.

இடபம்: நல்லதைச் செய்வீர்கள். நலன் பெருகும்? பிரமுகர்கள் உங்களைத் தேடி வருவார்கள். சமூகத்தில் மதிப்பு உயரும் அரசியல் வாதிகள் அதிஷ்ட்ட தேவதைகளை அணைத்துக் கொள்வர்.

மிதுனம்: இலக்கிய இரசனையுடன் இசையிலும் பரியம் ஏற்படும். எழுத்தாளர்களுக்கு புதிய படைப்புக்கான கரு கிடைக்கும். நாடகக்கலைஞர்களுக்கு பொன்னான தினம்.

கடகம்: வெளியிடத்துப் பயணம் மேற்கொள்ளப்படலாம். உடல்நலத்தைப் பேணவும். வரட்டிடும் பிணியும் உபத்திரவாதைக் கொடுக்கும். சுகாதாரப் வேண்டும்

சிங்கம்: இல்லத்தில் இனிமைவளரும், உறவினர்கள் கூடுவார். உல்லாசமான பொழுது போக்கும் உண்டு. திருமணப் பேச்சுக்கும் டமுண்டு.

கன்னி: எண்ணியதில் தடைகள் தோன்றும். ஏமாற்றம் தாக்கும். நண்பர்களும் காலை வாரிவிடக்கூடும். நிதானம் வேண்டும். இறைவழிபாடு நன்று.

துலாம்: தந்தை வழி ஆதரவு தவறாமல் கிடைக்கும் தடைகள் எல்லாம் தவிடு பொடியாகும் தனிக்கொடி பறக்கும் பொதுவாக ஒரு பக்தி விரும்பத்தக்கது.

விருச்சிகம்: தங்கக்குணம் மேலிடும் தக்க மதிப்புக் கிடைக்கும். இனத்தவர்களுடன் தொடர்புகள் பெருகும். உழைப்பினால் பயனும் உற்சாகமும் பெருகும்.

தனுசு: கைநிறையப் பணம் தாராளமாகக் கிடைக்கும், புதிய விருந்தினர்கள் உங்களைத் தேடிவருவார்கள். தொழில்துறையில் இடமாற்றத்திற்கும் இடமுண்டு. வெளியூர் பயணமும் ஏற்படலாம்.

மகரம்: தன்பத்தின் நிழலாட்டம் உங்களைத் தொடரும். இறிய தலையிடிக்கும் இடமுண்டு. புதிய முதலீட்டை இன்று தவிர்த்துக்கொள்ளவும். பிரயாணத்தைப் பிற்போடுவது நல்லது.

கும்பம்: ஆத்திரப்படுவதால் நண்பர்களைப் பகைத்துக் கொள்வீர்கள். எழுத்துமூலம் தொடர்பு கொள்வதை இன்று தவிர்த்துக் கொள்ளவும். குழந்தை ஒன்றின் உடல நலம் இன்று பாதிக்கப்படலாம்.

மீனம்: பெரிய இடத்துச் சிநேகிதம்இன்றுஏற்படலாம், சிலருக்கு அரசியலிலும் ஆர்வம் பிறக்கும். புதுவழிகளின் மூலம் பணம் கிடைக்கும். குடும்பத்தில் மகிழ்ச்சிக்கும் இடமுண்டு.

சோதி கலாநிதி

திருமலை க. வேலுப்பிள்ளை

# மக்கள் கருத்து

### காவலூர் பஸ் சேவை சீராகுமா?

சில தினங்களின்முன் யாழ்ப்பாணத்திலிருந்து ஊர்காவற்றுறைக்கு செல்வதற்கு யாழ் பஸ் நிலையத்திற்கு மாலை 5-15 க்குச் சென்றேன் நான் போகவேண்டிய 780 இலக்க சேவை பஸ் (சுருவிலூடாக ஊர்காவற்றுறைக்குச் செல்வது) குறிப்பிட்ட நேரத்துக்கு 15 நிமிடங்கள் முன்னரே போய்விட்டதால், அடுத்த (6-15மணிக்கு புறப்படும்) பஸ்ஸுக்காகக் காத்திருந்தேன். என்னுடன் ஒரே கியூவில 779 இலக்க பஸ்ஸுக்காக நின்றவர்களும் அவர்களுக்கான 5-30க்குச் செல்லும் பஸ் வராததால் காத்துநின்றனர். 5-45 க்கு 780 இலக்க பஸ் வந்ததும் சுருவிலூடாகச் செல்லும் பிரயாணிகளும் 779 பஸ்ஸுக்காக நின்றவர்களும் ஏறியதால் பஸ் நிரம்பிவிட்டது. 41 பிரயாணிகள் செல்ல அனுமதிக்கப்பட்ட அந்த பஸ்ஸில் கிட்டத்தட்ட 80க்கும் அதிகமானோர் ஏறிய பின் பஸ் போகவேண்டிய பாதையால் மட்டுமல்லாது சாட்டி, சுருவில் ஊடாகவும் செல்லுமென அறிவித்தார்கள். 5-30க்குச் செல்லவேண்டிய 779 இலக்க பஸ் தாமதமாகி 5-45 க்கு அவ்விடம் வந்து உடனேயே நான் கைந்த பிரயாணிகளுடன் சென்றுவிட்டது. அந்த பஸ்ஸில் செல்லவிருந்தபிரயாணிகளுக்கு அறிவிக்காததால் அவர்கள் அதில் பிரயாணம் செய்யமுடியாமல் போயிற்று. அந்த பஸ் சில பிரயாணிகளுடனேயே சென்றது இத்தனைக்குப் தொகையான பிரயாணிகளுடன் ஏற்கவே நின்றிருந்த 780 சேவை பஸ் புறப்பட்டு சாட்டியூடாகச் சென்று கொண்டிருக்கையில் அதை இடைமறித்த பிரயாணிகள் கிட்டத்தட்ட 30பேர் பலவந்தமாக புகுத்தப்பட்டனர். அவர்களுடன் 10 மூடை பொருட்களும் பஸ்ஸுக்குள்ளேயே ஏற்பட்டது.

இப்படியான ஒரு சங்கடமான நிலை ஏற்படாமல் நான்கு பிரயாணிகளுடன் போன அந்த பஸ்வண்டியை சாட்டியூடாக அனுப்பியிருக்கலாம் அல்லது நல்முறையில் அறிவித்து சுருவிலூடாகச் செல்லும் பிரயாணிகளைத் தவிர்ந்த ஏனைய பிரயாணிகளை ஏற்றிச் சென்றிருக்கலாம் இப்படியான தவறுகள் இனிமேலும் ஏற்படாமலிருக்க நேரக்காப்பாளர்கள், சம்பந்தப்பட்ட உத்தியோகத்தர்கள் கவனம் செலுத்தல் வேண்டும்

எஸ். குகநாதன்<br>தென்சரம்பன்.

0 0 0

### செய்தியின்மேற் பலன்

'ஈழநாடு' பத்திரிகையில் சில நாட்களுக்கு முன் பண்டத்தரிப்பு-மாதகல் பிரதான வீதியின் அவல நிலைபற்றிச் செய்தி வெளியாகியிருந்தது. அச்செய்தி பிரசுரிக்கப்பட்ட சில நாட்களுக்குள் பண்டத்தரிப்பு-மாதகல் பிரதான மேடு பள்ளங்கள் திருத்தப்பட்டு ஓரளவு போக்குவரத்துச் சீர்செய்யப்பட்டுளளது. மேற்படி செய்தி ஈழநாடு பத்திரிகையில் வெளிவர முன்பு இ. போ. ச. பஸ்கள் கூட தங்கள் 787 மாதகல்-கீரிமலை சேவையினை ரத்துச் செய்துவிட்டிருந்தன. ஈழநாடு பத்திரிகை செய்தி வெளியிட்டதன் பயனாக மாதகல் மக்கள் பெரும்பயன் பெறுகின்றனர்.

பொ. நாகராசா<br>மாதகல்.

### 'இடம் மாற்ற வேண்டாம்'

[சரவணை]

புங்குடுதீவு அரசினர் வைத்தியசாலை உதவி வைத்தியர் திரு. நடராசாவின் இடமாற்றத்தை இரத்துச்செய்ய வேண்டுமெனப் பொதுமக்கள் கேட்டுள்ளனர். அவரது சேவையை நீடிக்க ஆவன செய்யவேண்டுமென தீவுப்பகுதி எம். பீயை மக்கள் கேட்டுள்ளனர். [அ]

### பஸ்சேவையை நீடிக்கக் கோரிக்கை

[புலோலி]

பருத்தித்துறை இ. போ. ச. டிப்போவினால் நடாத்தப்படும் சகல தாளையடி பஸ் சேவையையும் ஆழியவளை வரை நீடிக்குமாறு இப் பகுதி மக்கள சம்பந்தப்பட் அதிகாரிகளைக் கோரியுள்ளனர்

பருத்தித்துறை டிப்போவினால் நடாத்தப்படும் ஆழியவளை பஸ் சேவை காலை ஒரு தடவையும், மாலை ஒரு தடவையு மாத்திரம் நடை பெறுவதாகவும் அதற்கு இடைப்பட்ட நேரத்தில் நடாத்தப்படும் பஸ் சேவைகள் தாளையடியுடன் நிறுத்தப்பட்டு விடுவதாகவும், இதனால் இப்பகுதி மக்கள் பலத்த கஷ்டங்களையும் சிரமங்களையும் அடைந்து வருவதனால் இந்த டிப்போவினால் நடாத்தப்படும் தாளையடி பஸ் சேவையை ஆழியவளை வரை நீடிக்குமாறு அக் கோரிக்கையில் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது. [அ]

# "ஞானமுதிர்ச்சியற்ற நடைமுறையே துன்பங்களுக்குக் காரணம்"

[யாழ்ப்பாணம்]

"இன்னல்களைக் களையவே கணபதி துணையாக நிற்கின்றான். விக்கினங்களை விலக்கிவிடுவதாலேயேகணபதிக்கு விக்கினேஸ்வரன் என்னும் பெயர் வந்தது விக்கினேஸ்வரனுடைய இரண்டு திருப்பாதங்களும் இரண்டு பக்குவங்களை பயன்களை நமக்குப் போதிக்கின்றன. ஒருதிருவடி ஞானத்தையும் மற்றையது ஞான வழிப்பட்டநடைமுறையையும் நமக்கு விளங்கவைக்கின்றன"

மேற்கண்டவாறு பருத்தித்துறை கொட்டடி ஸ்ரீ சித்தி விநாயகர் தேவஸ்தான மகா கும்பாபிஷேகத்தின் தொடர் சொற்பொழிவு நிகழ்ச்சியில் சிறப்புரையாற்றிய புலவர் ஈழத்துச் சிவானந்தன் கூறினார். மெய்கண்டார் ஆதின கர்த்தர் சீலத்திரு தம்பிரான் சுவாமிகள் இந்நிகழ்ச்சிக்குத் தலைமைவகித்தார்.

புலவர் சிவானந்தன் தமது உரையில் தொடர்ந்து கூறியதாவது;-

"அஞ்ஞானத்தை அகற்றி மெய்ஞ்ஞானத்தை ஆக்கியே காரியங்களில் ஈடுபடவேண்டும். ஞானமுதிர்ச்சி இல்லாத நடைமுறைகளாலேயே துன்பங்கள் உண்டாகின்றன. ஒரு காரியத்தைச் செய்வதற்கு முன்னால் அக்காரியத்தைப் பற்றியும் அக்காரியசித்திக்குரிய வழிவகைகளையும் அக்காரிய சித்தியால் உண்டாகப் போகும் விளைவுகளையும் நன்கு ஆராய்ந்துபார்த்த பின்பே அறிவுத்துணையோடு முயற்சிகளில் முனைய வேண்டும்.

ஆனைமுகத்தனான விக்னேஸ்வரன் ஞானக்கொழுந்தாகவும் நமக்கு பிரகாசிக்கின்றான். முருகனுக்கு முன் உதித்த கணபதியைக் கைதொழுதால் அல்லல் போம், வல்வினைபோம், போகாத்துயரம்போம், நல்ல குணம் அதிகமாகும் என்று பெரியோர்கள் சொன்னார்கள் சிவபெருமானின் மூத்தகுமாரனை பிள்ளையார் பலருக்கு முதல்கடவுளாக மட்டுமன்றி குலதெய்வமாகவும் விளங்குகின்றார் பண்டுதொட்டு நம்மவர்களின் வழிபாட்டோடும் வாழ்க்கையோடும் இணைந்து அருள்செய்யும் கருணையினால் கணபதிக்கு இல்லங்களிலும் உள்ளங்களிலும், ஊர்களிலும். திருக்கோவில்கள் தோன்றியுள்ளன. கோவிலைவழிபடும் கணபதி பக்தர்கள் கணபதியின் நோக்கமறிந்து நல்லன நினைத்து, நல்லன சொல்லி, நல்லன செய்துவாழ வேண்டும் மண்ணகத்தே வந்து நம்மையெல்லாம் வாழச் செய்தபரம் பொருள் பொன்னும், மெய்ப்பொருளும் தந்து போகமும திருவும் புணர்டபித்துள்ளான்.

கடவுள் தந்தவற்றைப் பேணி காப்பாற்றி எல்லோரையும் இன்புற்றிருக்க வழிசெய்து இல்லாததை ஏற்று இருப்பதைக் கொடுத்து இன்ப அன்பு மலரும் சமூகத்தை உருவாக்க வேண்டியதுசைவமக்களுடைய கடமையாகும்." [அ]

# அரசமைப்பு 2-வது திருத்தம்: இன்றைய நிலை: எதிர்க்கட்சிகவலை அன்றைய நிலை: அரசினர் விளக்கம்

இலங்கை ஜனநாயகசோஷலிசக் குடியரசு அரசியலமைப்பின் இரண்டாவது திருத்தம் கடந்த வியாழக்கிழமை சபையில் சமர்ப்பிக்கப்பட்டு சுமார் ஐந்து மணித்தியாலங்களுள் நிறைவேறியது.

அவசர அவசரமாக நிறைவேற்றிவிடுவதற்கான அரசின் முயற்சிக்குக் கடும் ஆட்சேபனையும், கொண்டுவரப்பட்ட திருத்தச்சட்டமூலத்துக்குக் கடும் எதிர்ப்பும் தெரிவித்து பிரதான எதிர்க்கட்சியினரான தமிழர் விடுதலைக்கூட்டணியினர் சபையைவிட்டு ஆரம்பத்திலேயே வெளியேறிவிட, மற்றைய எதிர்க்கட்சியினரான சிறிலங்காசுதந்திரக்கட்சியினர் விவாதத்தில் கலந்துகொண்டு தமது கடுமையான எதிர்ப்பை திருத்தச் சட்டமூலத்துக்குத் தெரிவித்தார்கள்.

சட்டமூலத்தைச் சபையில் சமர்ப்பித்த பிரதமர் திரு. ஆர் பிரேமதாசாவைத்தவிர, கல்வி அமைச்சர் திரு. நிஸங்கா விஜயரத்தின, காணி, காணி அபிவிருத்தி, மகாவலி அபிவிருத்தி அமைச்சர் திரு காமினி திசநாயக்கா ஆகிய இருவருமே அரசு தரப்பில் இந்த விவாதத்தில் கலந்து கொண்டனர்.

எதிர்க்கட்சியில் எட்டுப் பேரைக்கொண்ட சிறிலங்கா சுதந்திரக்கட்சியின் அறுவர் இந்த விவாதத்தில் உரை நிகழ்த்தினார்கள்.

திரு அநுரா பண்டாரநாயக்கா அன்று சபைக்கு வரவில்லை. ஆனைமடுவ உறுப்பினர் திரு சந்தாதிஸ்ஸ வடிவமங்களவவைத்தவிர சுதந்திரக் கட்சி உறுப்பினர்கள் அனைவரும் அன்று சட்டமூலத்தை எதிர்த்து வாதிட்டார்கள்.

எதிர்க்கட்சியின் இடதுபுறத்திலிருந்து அடுத்தடுத்து அன்று கண்டனப் பாணங்கள் எழுந்தபோது அரசாங்க பின்வரிசைகளிலிருந்து கூச்சலும் கிண்டலுமாக எதிர்ப்பாணங்கள் சபையில் கிளம்பிக்கொண்டிருந்தன.

சுமார் ஐந்துமணித்தியாலங்கள் இந்த விவாதத்தில் களை பெற்றிருந்த சபையின் 'களை' யைப் போக்கும் விதத்தில் பலத்த சிரிப்பொலிகளை எழுப்பி பிரதமர் தமது பதிலுரையை நிகழ்த்தினார்.

சுதந்திரக்கட்சியினர் பலமான தங்கள் எதிர்ப்பைத் தெரிவித்து வாதிட்டாலும் நகைச்சுவைக்கும் சபையில் குறைவிருக்கவில்லை.

பிற்பகல் 2 மணிக்கு சபை ஆரம்பித்தபோது இரண்டாவது அரசியலமைப்புத்திருத்த சட்டமூலத்தையும், உள்ளூரதிகாரசபைகள் திருத்தச்சட்டமூலத்தையும் சமர்ப்பித்த பிரதமர் இந்த இரண்டு சட்டமூலங்களினதும் விவாதங்களை உடனேயே நிகழ்த்தும் விதத்தில் சபை நிரந்தர விதிகளை இடைநிறுத்தும் பிரேரணையைக் கொண்டுவந்தபோது தமிழர் விடுதலைக் கூட்டணித் தலைவரும், நல்லூர் உறுப்பினருமான திரு எம்சிவசிதம்பரம் அதற்கு வன்மையான எதிர்ப்பைத் தெரிவித்தார்.

## சிவாவின் குற்றச்சாட்டு

பொறுப்பற்ற முறையில் அரசாங்கம் நடந்துகொள்வதாகக் குற்றஞ்சுமத்திய அவர், சட்டமூலங்களை ஒரே நாளில் சமர்ப்பித்து, நிறைவேற்றிவிடுவதை இந்த அரசு ஒரு வழக்கமாகவேகொண்டிருக்கிறதென்றும், அரசியலமைப்புத் திருத்தத்தைக்கூட அதே விதத்தில் நிறைவேற்ற முயற்சிப்பதாகவும் அவர் கூறினார்.

இத்திருத்தச் சட்ட மூலத்தைப் பற்றி ஆராய தமக்கு அவகாசமில்லை. வர்த்தமானி மூலம் வெளியிடப்படாததால் இத்திருத்தம்பற்றி மக்கள் அறிந்துகொள்ள முடியவில்லை; உயர்நீதிமன்றத்தில் நீதியரசர்களும், சட்டமா அதிபரும் மாத்திரமே சட்டமூலம் பற்றி ஆராய்ந்ததால் மற்றைய கருத்தைப்பெற உயர்நீதிமன்றத்துக்கு வாய்ப்பில்லையென்றும் தெரிவித்த திரு சிவசிதம்பரம். நாட்டின் அரசமைப்பை இந்த விதத்தில் திருத்தமுயல வேண்டாமென்றும், போதிய அவகாசத்தை அளித்து விவாதத்தை ஒத்திவைக்கும்படியும் முழுஎதிர்க்கட்சியினதும் சார்பில் தாம் இதனைக் கேட்டுக்கொள்வதாகவும் தெரிவித்தார்.

உறுப்பினர்களின் உரிமையையும், சுதந்திரத்தையும் பற்றிய திருத்தமே இதுஎன்று ஆட்பேபனைக்கு பதிலளித்த பிரதமர், தேர்தல்நடைபெற்று 19 மாதங்களாகிவிட்டன என்றதும் எதிர்க்கட்சித் தலைவர் திரு அ. அமிர்தலிங்கம் குறுக்கிட்டு 19 மாதங்கள் பொறுத்திருந்த நீங்கள் இன்னும் 19 நாட்கள் பொறுக்கக்கூடாதா என்று கேட்டார்.

-- மாலி --

எப்படியானாலும், எதிர்க்கட்சியினரின் கோரிக்கையை தம்மால் ஏற்கமுடியாதென்று பிரதமர் கூற, பிரேரணைக்கு சபையின் ஆதரவை பிரதிச் சபாநாயகர் கோரினார்.

எதிர்க்கட்சியினர் தாம் ஆதரவில்லை என்று கூறவும், திரு. அமிர்தலிங்கம் வாக்கெடுப்புக்கு விடும்படி கோர பிரேரணை வாக்கெடுப்புக்கு விடப்பட்டது.

125 பேர் ஆதரவாகவும், 18பேர் எதிர்த்தும் வாக்களித்தனர். கூட்டணியும், சுதந்திரக் கட்சியும் எதிர்த்து வாக்களித்தன

## அமிர் அறிக்கை

பெரும்பான்மை வாக்குகளுடன் பிரேரணை நிறைவேறியதும், பிரதமர் திருத்தச்சட்ட மூலத்தின் விவாதத்தை ஆரம்பித்து, சுருக்கமாக- அறிக்கையொன்றைச் சமர்ப்பித்து அமர்ந்ததும் எதிர்க்கட்சித் தலைவர் எழுந்தார்.

வழக்கத்துக்கு மாறாக பிரதமர் தமதுபேச்சைச்சுருக்கமான ஓர் அறிக்கையை வாசித்து முடித்ததிலிருந்து இத்திருத்தச்சட்டமூலத்துக்கானதகுந்த காரணத்தை அவராலேயே கூறமுடியவில்லையென்று ஆரம்பித்த திரு. அமிர்தலிங்கம், புதிய அரசியலமைப்பு நிறைவேற்றப்பட்ட 5 மாதத்துள் இது இரண்டாவது திருத்தமென்றும், இத்திருத்தம் எதிர்க்கட்சியொன்று தனது கட்சியிலிருந்து அரசு பக்கம் மாறிய ஓர் உறுப்பினர் தொடர்பாக உயர்நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல்செய்திருக்கும் வேளை, அவரை காப்பாற்றும் நோக்குடன்— அத் தேவைக்காகவே அரசியலமைப்பின் தொடக்க நாளிலிருந்தே அமுலுக்கு வருவதாலும் வேண்டுமென்று பின்னோக்கிய விதத்திலும் கொண்டுவரப்படுகிறது என்று தெரிவித்து, யானை சங்கிலியைத் தூக்கி தன்னையே பிணைக்க கொடுப்பதைப் போன்றதுதான் இத்திருத்தம் என்பதை அரசாங்க உறுப்பினர்களே பின்னர் உணர்ந்து கொள்வார்கள் என்றதும் சபையில் ''இல்லை, இல்லை'' என்று கூச்சல்கள் எழுந்தன.

தேர்தல்காலத்தில் கட்சி மாறும் உரிமை உறுப்பினர்களுக்கு இருந்ததென்றும், எதிர்வரும் தேர்தலில் தேர்தல்முறை மாற்றப்பட்டு, தனிப்பட்ட எவருக்கும் வாக்களிக்கும் நிலைமை ஏற்படாததால் அடுத்த தேர்தல்வரையிலான இடைப்பட்ட காலத்திற்கு உறுப்பினர்களுக்கு அவர்களின் தேர்தல் காலத்தில் இருந்த உரிமையை அளிப்பதே இச் சட்டமூலத்தின் நோக்கம் என்றும் பிரதமர் தெரிவித்திருந்த கருத்தை குறிப்பிட்ட திரு. அமிர்தலிங்கம், அப்படியானால் அந்த உரிமை அரசாங்க உறுப்பினர்களுக்கு அளிக்கப்படுகிறதா? என்று கேட்டார்.

''85 பேர் ஆதரவாக வாக்களித்தால் தான் அரசு உறுப்பினர் ஒருவர் எதிர்க்கட்சிக்கு வரமுடியும். இது நடக்கக் கூடியதா?''

## ஜனநாயகத்துக்கு எதிரானது

ஜனநாயகத்துக்கு எதிரான அநியாயம் இது என்ற திரு. அமிர்தலிங்கம்ஜனநாயகத்தை பகிடியாக்கும் இத்தகைய ஒரு திருத்தத்தின் விவாதத்தில பங்குபற்றுவது வெட்கக்கேடானது; எமது எதிர்ப்பைத் தெரிவித்து நாம் வெளியேறுகிறோம் என்று கூறி பிற்பகல் 2-59க்கு அவர் சபையை விட்டு வெளியேற, அவரைத் தொடர்ந்து கூட்டணி உறுப்பினர்கள் அனைவரும் வெளியேறினார்கள்: சபையில் ''புலிகள் போகின்றன'' என்று பெருங்கூச்சல் அப்போது எழுந்துகொண்டிருந்தது.

மனச்சாட்சியுடன் போராடுபவர்கள்போய்விட்டார்கள்''- என்று அடுத்துப்பேசியஅமைச்சர் திரு. நிஸங்கவிஜயரத்தின தமது பேச்சை அப்போது ஆரம்பித்தார்.

கட்சி மாறுபவர்கள் மீண்டும் தேர்தலில் நிற்கவேண்டும் என்று திரு. அமிர்தலிங்கம் கூறியிருந்ததை தனது வாதத்துக்கு எடுத்த அமைச்சர், தமிழ்க்காங்கிரசிலிருந்து பிரிந்து திரு எஸ் ஜே வி செல்வநாயகம் தமிழரசுக் கட்சியையும் ஐதேகவில் இருந்து பிரிந்து திரு எஸ் டபிள்யு ஆர் டி பண்டாரநாயகா சுதந்திரக்கட்சியையும் ஆரம்பித்தபோது அவர்கள் மக்கள் முன் சென்று தேர்தல்களில் நின்றார்களா? என்றார்.

பொத்துவில் உறுப்பினர் திரு. கனகரத்தினம் போல் எமது அபிவிருத்திப் பணியில் பலர் சேர்த்துவிடுவார்கள் என பயப்படுகிறார்கள் என்ற அமைச்சர், வனாந்தரத்துக்கு எவரும் செல்லவிரும்பமாட்டார்கள்; எனவே அரசு உறுப்பினர் எவரும் எதிர்க்கட்சி எதிலும் சேரும் நிலை ஏற்படாது எனவே அதற்கு வசதி வேவையில்லை என்றும் கூறினார்.

நீதிமன்றத்தின் சுதந்திரத்தைப் பறிக்கும். நடவடிக்கைகள் இவையென்றும் அதிகார பலத்தால் அரசாங்கம் நியாயத்தையும் ஜனநாயகத்தையும் அடிமைப்படுத்தி,- சகல பாபச்செயல்களிலும் ஈடுபட்டு மக்களைக் கொதிப்படையச் செய்ய அரசு முயலுவதாகவும் சர்வாதிகார எதேச்சாதிகாரிகளுக்கு இது ஒரு பிரச்னையாக தெரியாது போகலாமென்றும் மதவாச்சி உறுப்பினர் திரு. மைத்திரிபாலசேனநாயக்கா கூறினார்.

ஆயிரம், இரண்டாயிரம் வருடங்களுக்கான ஓர் அரசியலமைப்பை நாம் எழுதவில்லை. ஆனால் சுதந்திரக் கட்சியினர் அப்படித்தான் தமது அரசியலமைப்பைக் கருதினார்கள் என்றார் அமைச்சர் காமினிதிசாநாயக்க.

அதன்பின்னர், சு க. உறுப்பினர்கள் திரு ஆனந்த தசநாயக்க, திரு ஆர பி விஜயசிறி, ஜனப் ஹாலிம் இஷாக், திரு எஸ் டி பண்டாரநாயக்கா ஆகியோரும் கடைசியாக திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்காவும் சபையில் பேசினார்கள்,

வழக்கம்போலவே கொத்மலை உறுப்பினர் திரு ஆனந்த தசநாயக்க ஹரிஸ்பத்துவ 2வது உறுப்பினர் திரு. விஜயசிறி ஆகியோர் பேச எழுந்ததுமே அரசாங்க பின்வரிசை உறுப்பினர் உற்சாகமடைந்துகொண்டனர்.

சுதந்திரக் கட்சியினரை நோக்கி, 'மோடயா' [மடையா] என்ற வார்த்தை இப்போதெல்லாம் அரசாங்க பின் வரிசைகளிலிருந்து சரளமாக எழுவதை அவதானிக்க நேர்கிறது.

நீண்ட நேரமாகவே பேசிய கொத்மலை உறுப்பினர் இத் திருத்தச் சட்டமூலம் அரசாங்க உறுப்பினர்களுக்கு பூட்டப்பட்ட கடிவாளம் என்றார்.

ஒவ்வொரு மாதமும் திருத்தம்வரும் என்பதை நாம் முன்னரே கூறினோமென்றும் சொன்னார் அவர்.

நாசுக்கான நகைச்சுவையாகவே பேசும் திரு. விஜயசிறி, ''வேண்டுமானால் பேருவளை 2-வது உறுப்பினர் மீதான (சு. க. விலிருந்து அண்மையில் அரசாங்கத்தில் சேர்ந்து கொண்ட திரு. ஆர். ஜி. சமரநாயக்கா) எமது உயர் நீதிமன்ற வழக்கை நாம் வாபஸ் பெற்றுக்கொள்கிறோம்; இச்சட்டமூலத்தை நீங்கள் வாபஸ் பெற்றுக்கொள்ளுங்கள்'' என்றார்.

இச்சட்டமூலங்களால் தேசிய ஒற்றுமை எதனையும் ஏற்படுத்திவிட முடியாதென்று தெரிவித்து கடந்தகால நிகழ்வுகள் சிலவற்றை சபையில் நினைவுபடுத்தினார் கம்பஹா உறுப்பினர் திரு. எஸ். டி. பண்டாரநாயக்கா.

[5-ம் பக்கம் பார்க்க]

## பேரந்தனுளன் நடராஜக்குருக்கள்

சுமார் எழுநூறு ஆண்டுகள் பழம்பெருமை நிறைந்தசைவ ஆலயங்கள் அங்கணம்மைக் கடவை ஸ்ரீமீனாட்சி அம்மை, உடுவில் மீனாட்சி, கந்தரோடை நாகபூஷணியம்மை, சுன்னாகம் ஐயனார், மயிலணி கண்ணபரமாத்மா(மஹா விஷ்ணு), கந்தசுவாமி கோவில், ஸ்ரீசந்திரசேகர விநாயகர் ஆலயம் ஆதியனவாகும். இக்கோவில்களைப் பரிபாலனம் செய்ய பண்டைய மன்னர்கள் கொணர்ட்டுச்சிமைகளான சிலபுருஷர்கள் ஸ்ரீராமகிருஷ்ண இலக்குமணதேவ ஆசாரிமார்களைத் தருவித்து சைவப்பணிபுரிய அமர்த்தப்பட்டனர். இவர்கள் வாரிசாக அண்மையில் சிவபதமெய்திய சுப்பிரமணிய கார்த்திகேயக் குருக்கள் பரம்பரையினர் கந்தரோடையில் வாழ்ந்து, அன்னை அம்பிகை மீனாட்சி அம்மைக்கு அருந்தொண்டு செய்து வந்தனர். அவர்களுள் பேரந்தனுளைப் பிறந்தபேற்றைப் பெற்ற பண்பாளரான நடராஜக்குருக்கள் எனஅழைக்கப்படும் அமரர் கார்த்திகேய சிவ ஆச்சாரியார், கோவில் திருப்பணிகளின் மேலானவற்றை மிகவும் திறமையுடன் நடாத்திய பெருமையைப் பெற்ற பெரும் நிர்வாகநிறைவாளன் இனி வேறு எவராலும் இந்த ஸ்தானத்தை நிறைக்க முடியாதென்னும் அளவிற்கு பிறரும் வியக்கும் வகையில் பெருந்தொண்டு ஆற்றிப்புகழுடம்புடன் இன்றும் வாழ்ந்துவருகின்றார் எனப் பல்லோராலும் பேசபடுகின்றார்.

இவர் பயிற்சியுடைய வேத அத்தியயனங்கள், நீதி சாஸ்திரம் என்பவற்றை காலஞ்சென்ற சைவவடமொழி வல்லுநர் முகாந்திரம் சதாசிவ ஐயரிடம் கற்கும் பெருமையை பெற்றிருந்தவர். அதே கல்வி கேள்வி அனுபவங்களினால் தமிழகம் பழனி ஈசானசிவாச்சாரியார் போன்ற பெருமேதைகளின் சேர்க்கையும் நிறையப்பெற்று பல்வேறு தமிழக ஈழநாட்டுச் சிவாச்சாரியர்களுடன் ஒன்றிணைந்து சிவகைங்கரியங்களில் ஈடுபாடு கொண்டு உழைத்த பெரும் பாக்கியசாலி. இவருடைய இளம்பருவம் தந்தையின் பேரிழப்பினால் பாதிக்கப்பட்ட போதிலும், தெய்வநம்பிக்கை, விடாமுயற்சி ஆகியவற்றால் ஓர் உதாரண வாழ்க்கைக்கு வித்திட்டுள்ளது. தம்பலகாமம் கோணேஸ்வரப் பெருமானின் புனராவர்த்தன மகாகும்பாபிஷேகம் [1953ம் ஆண்டு ஜனவரியில்] பல்வேறு குருமாரின் கூட்டுமுயற்சியினால் திறமையாகச் சாதிக்கப்பட்ட சமயம், அங்கு நின்று நிதானமான பெருஞ்சேவை செய்து இளம்பராயமான யௌவன பராயத்தில் ஈசானசிவாச்சாரியாரின்பாராட்டையும்பெற்று உய்ந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

அன்னார் பேரிழப்பு எவராலும் ஈடுசெய்யமுடியாத ஒரு பெரும் நஷ்டம். இலைமறைகாய்போல இருந்து இறைவனடி அடைந்த இந்த அமரர், சிவாச்சாரியர்பால் சொல்வன விதந்துரைகளாக மாட்டா. சிவாச்சாரியசுவாமிகள் ஆன்மா சாந்தியடையப் பிரார்த்திப்போம்.

[அன்னாரது தசாகம் இன்று நடைபெறுகிறது ]

---அம்பிகைதாசன்

## வீதிச்சீர்கேடு ஆசிரியர்களின் 'காலை வாரியது'

[புலோலி]

பருத்தித்துறைத் தொகுதியிலுள்ள பாடசாலையொன்றுக்கு பருத்தித்துறை எம். பி. திரு. கே. துரைரத்தினம், யாழ். மாவட்டப் பிரதம கல்வியதிகாரி திரு. என். ஆர். பாலசிங்கம் ஆகியோரடங்கிய குழுவொன்று சென்றிருந்தபோது, அங்கு அதிபர் உட்பட பல ஆசிரியர்கள் வந்து சேராதமையினால் அவர்கள் வரும்வரை காத்திருக்க வேண்டியேற்பட்டது.

நாகர்கோவில் மகாவித்தியாலயத்திலேயே இச்சம்பவம் நடைபெற்றது. வீதிச் சீர்கேட்டினால் பிரஸ்தாப பாடசாலையிலிருந்து சுமார் இரண்டு மைல்களுக்கு அப்பாலே இவ் ஆசிரியர்கள் வந்த பஸ் வண்டி நிறுத்தப்பட்டு விட்டதாகவும், ஆசிரியர்கள் கால்கடுக்க நடந்து வந்துகொண்டிருப்பதாகவும் பருத்தித்துறை எம். பி.க்குத் தெரிவித்ததைத் தொடர்ந்து எம். பி. உடனே தமது ஜீப் வண்டியை அனுப்பி அவர்களைப் பாடசாலைக்கு வருவித்தார். [அ]

## ரூ. 34 ஆயிரம் லாபம்

[புலோலி]

பருத்தித்துறைக் கடற்றொழிலாளர் கூட்டுறவுச்சங்கத்திற்குக் கடந்த வருடம் 34,000 ரூபா இலாபமேற்பட்டுள்ளது. இத் தகவலைச் சங்கப் பொது முகாமையாளர் திரு. என். கனகசேகரம் தெரிவித்தார். [அ]

வெஸ்லி
(மானிப்பாய்)
தினசரி 6-30, 9-30
சனி, ஞாயிறு 2-30
எம்.ஜி.ஆர் —பத்மினி
விக்கிரமாதித்தன்

நாகம்ஸ்
(சுன்னாகம்)
தினசரி 6-45, 10-00
சனி, ஞாயிறு 2-45
எம்.ஜி ஆர் - சரோஜாதேவி
திருடாதே

Rio (Jaffna)
Phone: 7607
Daily 4 Shows
The Four Keys
(Murder-Suspense- Thrill)

## மகாஜனாவில் மீண்டும் முதலாம் வகுப்பு

(பண்டத்தரிப்பு)

இவ்வருடம் தொடக்கம் தெல்லிப்பழை மகாஜனாக் கல்லூரியில் நிறுத்திவைக்கப்பட்ட முதலாம் வகுப்பை மீண்டும் ஆரம்பித்து நடத்துமாறு கல்வி அமைச்சு வடமாநிலக் கல்வி அதிபர் ஊடாக கல்லூரி அதிபரை பணித்துள்ளது கடந்த வருடங்களில் இயங்கிவந்த முதலாம் வகுப்பு இவ்வருடம் முதல் நிறுத்தப்பட்டுள்ளதை ஆட்சேபித்து மேற்படி கல்லூரி பெற்ருர்-ஆசிரியர் சங்கம் கல்வி அமைச்சுக்குப் பலத்த ஆட்சேபம் தெரிவித்திருந்தது. [அ]

## பரு. எம். பி. ஆட்சேபம்

[புலோலி]

பருத்தித்துறைத் தொகுதியில் தமக்குத் தெரியாதமுறையில் நடைபெற்ற ஆசிரியர் இடமாற்றங்களுக்குப் பருத்தித்துறை எம். பி. திரு க. துரைரத்தினம் ஆட்சேபம் தெரிவித்துள்ளார் கல்வியமைச்சு அவ்வத்தொகுதி எம் பி.க்களின் அனுமதியுடனேயே ஆசிரியர்களின் இடமாற்றங்கள் செய்யப்பட வேண்டுமென்று அறிவிக்கப்பட்டிருந்தும் பருத்தித்துறை எம் பிக்குத் தெரியாமல் ஆசிரியர் இடமாற்றங்கள் நிகழ்ந்துள்ளனவாம். [அ]

## இன்பருட்டிக்கு புதிய சந்தை

[புலோலி]

இன்பருட்டியில் புதிய சந்தையொன்று அமைக்கப்படவுள்ளது இதற்கான ஆரம்ப நடவடிக்கைகளைப் பருத்தித்துறை எம். பி. மேற்கொண்டுள்ளார். [அ]

## இன்று மேடையேறும் இருநாடகங்கள் இருபாணிகள்

இன்று மாலை வீரசிங்கம் மண்டபத்தில் நாடக ஆர்வலர்களுக்குக் கலைவிருந்து ஒன்று காத்திருக்கிறது இலங்கை அவைக்காற்கலை கழகத்தின் மாதாந்த நிகழ்ச்சி வரிசையில் அதிமானிடன், தலைவர் என்ற இரு நாடகங்களும் சி. மௌனகுருவின் நெறியாள்கையில்இன்று மாலை ஆறரை மணிக்கு மேடையேறுகின்றன.

எம் ஏ.நுஃமானின் அதிமானிடன் என்ற நெடுங்கவிதை கட்புலவடிவம் பெறுவதே முதல் நாடகமாகும். அதிகமானிடன் கவிதை மானுடத்தின் வரலாற்றைச் சித்திரிப்பதாகும் "வரலாற்றின் ஓட்டத்திலே பற்பல நூற்றுண்டுகளின் படுவேகமான சுழற்சியை மிகவும் இலாவகமாகக் கையாளுகிருர் கவிஞர் மனித குலத்தின் இருபாதிகளிடையேயும் உள்ள உள்முரண்வரலாற்றை நடத்திச் செல்வதை மிகவும் இலாவகமாகக் கையாளும் அதிமானிடன் கவிதை கட்புலவடிவம் பெறமிக ஏற்றதாகும்.

நுஃமானின் மூலக் கவிதையை மேடைக்குரியதாக எழுதி நெறிப்படுத்தியுள்ளார் சி. மௌனகுரு ஆட்டம் பாவனை சிறு சிறு நாடகத்துணுக்குகள் ஆகியவை மூலம் கவிதைக்குக் கட்புலவடிவம் கொடுத்துள்ளார் மௌனகுரு மட்டக்களப்பு மரவுக்கூத்தின் தாளக்கட்டுக்கட்கு ஏற்ப அமைந்த அசைவுகள் நாடகத்தின் பெரும்பகுதியில் இடம் பெறுகின்றன. மரபுக்கலைகளை நவீனப்படுத்தும் முறையில் இதுவும் ஒருவகையாகும்.

அதிமானிடனும் சேர்ந்து மேடையேற இருக்கிறது. தலைவர் யூஜின் இயனெஸ்கோ என்ற பிரெஞ்சு நாடகாசிரியரின் த். லீடர் என்ற நாடகத்தின் தமிழாக்கம் தலைவர் இயனெஸ்கோ உலகப்பிரசித்தி பெற்ற சமகால நாடகாசிரியராவர் பல்வேறு மொழிகளில் இவரது நாடகங்கள் மொழிபெயர்க்கப்பட்டுள்ளன. அபத்த நாடகப்பாணியில் அமைந்துள்ள இந்நாடகத்தில் மேலோட்டமாகக் காணப்படும் அங்கதச் சுவைக்குள்ளே கடுமையான சமூக விமர்சனம் அடிச்சரடாக ஓடுகிறது.

இருவேறுபாணியில் அமையும் இவ்விருநாடகங்களும் நாடக ரசிகர்களுக்கு இருவேறு அனுபவங்களாக அமையுல் நுழைவுச் சீட்டுகளை வாயில் பெற்றுக் கொள்ளலாம.

--உதயதேவி

# நாளை யாழ், வரும்அமெரிக்க விமரிசகர் செல்வி ஸூசி

பிரபல அமெரிக்க ஓவியரும், நூலாசிரியரும், விமரிசகருமான செல்வி ஸூசிகப்ளிக் நாளை யாழ்ப்பாணம் வருகிருர். நாளை மாலை 6 மணிக்கு யாழ். பொதுநூல்நிலையக் கேட்போர் கூடத்தில் அவர் உரை நிகழ்த்தவிருக்கிருர். செல்வி ஸூசிபற்றிய விபரம் இங்கு தரப்படுகிறது.

ஸூசி கப்ளிக் நியூயார்க் நகரில் 1934ம் ஆண்டில் பிறந்தார். 1955-ம் ஆண்டு நியூயார்க் நகர சர்வகலாசாலையின் ஹன்டர் கல்லூரிப் பிரிவில் தனது கலையியல் புலமைப் பட்டத்தை (பீ ஏ.) ஈட்டினார். இவர் அமெரிக்க நாட்டின் சர்வகலாசாலைகளான யேல், ஸைராக் கூஸ், காலராடோ, விஸ்கான்ஸின், ஸான் பிரான்ஸிஸ்கோ கலாபயிற்சி நிலையம், மஸ்ஸாசூஸெட்ஸ் கலைக்கல்லூரி உட்பட்ட பலவற்றிலும் மற்றும் இலண்டனிலுள்ள ரோயல் கலைக்கல்லூரியிலும் ஸ்லேட்கண்க் கல்லூரியிலும் ஓவியப் பிரிவின் பயிற்சியாளராகவும் விரிவுரையாளராகவும் இருந்திருக்கிருர்.

செல்வி கப்ளிக் பல தனி ஓவியக் கண்காட்சிகளை நியூயார்க் அலன் கலாபவனத்திலும் (1963, 1966) லாண்டோ அலன் கலாபவனத்திலும் (1967), ஹென்றி கலாபவனம், வாஷிங்டன் (1971) மற்றும் நியூயார்க் டின்டென்ஃபாஸ் கலாபவனத்திலும் (1972) வெற்றிகரமாக நடாத்தியவர். தவிர கூட்டுக் கண்காட்சிகள் பலவற்றிலும் பங்கு பற்றியிருக்கிருர். இவற்றில் லாரன்ஸ் அல்லோவே, நியூயார்க் சாலமன் ஆர். கக்கென்ஹெல்ம் அரும் பொருட்கூடத்தில் ஏற்பாடு செய்த (1966) "புகைப்பட உரு" என்பது லண்டனில் உள்ள சமகால கலைகள்பயிற்று நிலையம் ஏற்பாடு செய்த "இளமையும் கற்பனைக்கு எட்டாத புதுமையும்" (1969) ஃப்ளோரிடாவிலுள்ள ஸரஸோட்ட றிங்னிங் கலை அரும் பொருட்கூடத்தில் நடந்த "ஸர் ரியலிஸத்தின் பின்னர்" (1972) என்ற காட்சி, நியுயோர்க் கலாசார நிலையம் நடாத்திய "மகளிர் தெரியும் மகளிர்" (1973) மற்றும் தற்கால கலை அரும் பொருட்கூடம் பென்ட்ஹௌஸில் ஏற்பாடுசெய்த "வார்ப்பு" (1975) ஆகியன உள்ளடங்கும்.

"செல்வி கப்ளிக் பல நூல்களையும் கட்டுரைகளையும் ஆக்கியவர். "மக்கள் கலை—புது விளக்கம்" [1969], "மாக்றிட்டா" [1920], "கலையின் வளர்ச்சி" [1976] ஆகியவை சில நூல்கள். இவரது கட்டுரைகள் ஹார்பர்ஸ் பசார்", ஆர்ட் ஃபோடும், ஆர்ட் நியூஸ், தி நியூயார்க் டைம்ஸ், ஸ்ருடியோ இன்டர்நாஷனல் [லண்டன்], ஸண்டே டைம்ஸ் [லண்டன்] மற்றும் ஆர்ட் இன் அமெரிக்கா ஆகிய புகழ்பெற்ற தரமான கலைச் சஞ்சிகைகளில் பிரசுரமாகியுள்ளன. செல்வி கப்ளிக் 1964—66ல் ஆர்ட் நியூஸ் சஞ்சிகையிலும் 1967ல் லண்டன் ஆர்ட் அன்ட் ஆர்டிஸ்டஸ் சஞ்சிகையிலும் கலை விமர்சகராக பணியாற்றினார்.

இவரது ஓவியங்கள் பற்றிய விமர்சனங்களும் கட்டுரைகளும் ஆர்ட் நியூஸ், ஆர்ட் 'அன்ட் ஆர்டிஸ்ட்ஸ், தி நேஷன், தி நியூயார்க் டைம்ஸ் மற்றும் ஸ்ருடியோ இன்டர்நேஷனல் ஆகிய சஞ்சிகைகளிலும் வெளிவந்திருக்கின்றன.

செல்வி கப்ளிக் 1966ம் ஆண்டிலிருந்து லண்டனில் வசிக்கிருர்.

## இன்றைய...

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

எதிர்க்கட்சிச் சார்பில் விவாதத்தை முடித்துவைத்து பேசிய சுதந்திரக் கட்சித் தலைவியும் அத்தனகல உறுப்பினருமான திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்கா "ஜனநாயகத்தை விட்டாலும் நேர்மைக்கு ஏற்றதா இத்திருத்தம்?" என்று கேட்டார்.

தம்முடைய நீதிமன்ற நடவடிக்கைகளுக்கெதிராக அரசாங்கம் உடனுக்குடன் இத்தகைய திருத்தங்களைக் கொண்டுவருவதாக கண்டித்த திருமதி சிறிமாவோ, பேருவளை உறுப்பினரைக் காப்பாற்றும் நடவடிக்கையே இது என்றும் கூறினர்.

### பிரதமர் பதில்

ஈற்றில் பிரதமர் திரு. ஆர். பிரேமதாசா விவாதத்துக்குப் பதிலளித்துப் பேசுகையில், "நான் பங்குபற்றிய கூட்டமொன்றில் பங்குபற்றியதற்காக மட்டக்களப்பு முதலாவது உறுப்பினரிடமும், ஜனாதிபதி கலந்துகொண்ட கூட்டமொன்றில் கலந்துகொண்டதற்காக கம்பஹா உறுப்பினரிடமும் அவர்கள் சார்ந்த கட்சிகள் விளப்பங்கள் கோரியிருக்கின்றன.

"இக்காரணங்களுக்காக இவர்கள் தங்கள் உறுப்பினர் பதவிகளை இழக்கலாமா?" என்று கேட்டார்.

அரசாங்கக் கட்சியில் எதிர்க்கட்சி உறுப்பினர்கள் சேருவதைக் கண்டிக்கும் சுதந்திரக் கட்சியினர் முன்னர் நிந்தாவூர் முஸ்தபாவையும், அருளம்பலம், தியாகராஜா ஆகியோரையும் ஏன் சேர்த்துக்கொண்டார்கள் என்றும் கேட்டார் பிரதமர்.

சுதந்திரக் கட்சியினர் ஏழு பேரும் எதிர்த்து வாக்களிக்க 131 ஆதரவான வாக்குகளுடன் இரண்டாவது அரசியலமைப்பு திருத்தச் சட்டமூலம் இரவு 7-30 மணிக்கு நிறைவேறியது.

சபை நிகழ்ச்சிகளைச் சர்வதேச பல்கலைக்கழகங்களின் பெண்கள் பிரதிநிதிகளும் அன்று சிறிது நேரம் சபாநாயகர் கலரியிலிருந்து அவதானித்தனர்.

குழுநிலை விவாதத்தின் போது சட்ட நுணுக்கம் தொடர்பான திருத்தம் ஒன்றைச் சமர்ப்பித்த பிரதமர், 'கள்ளக் கடத்தல்காரர்' என்று பின்னர் எம்மைக் கூறுதிருக்கவேண்டும் என்ருர்.

## ஜப்பான் சென்ருர்



குருநகரைச் சேர்ந்த திருஞா சீதபொன்னலன் கடற்றொழிற்கல்வியில் புலமைப் பரிசில் பெற்று உயர்கல்வி பெறுவதற்கு ஜப்பான் சென்ருர் குரு நகர் சென்ஜேம்ஸ் மகாவித்தியாலயம் சென். பற்றிக்ஸ் கல்லூரி, மட்டக்குழி கடற்தொழில் பயிற்சிநிலையம் ஆகியவற்றின் பழையமாணவருமான இவர்குருநகர் ஞானப்பிரகாசம் தம்பதிகளின் சிரேஷ்டபுதல்வராவர்.

கடைசி வாரம்
ராஜா (யாழ்நகர்)
தினசரி 4 காட்சிகள்
விஜயகுமார், ஜெயசித்திரா. நாகேஷ், சுந்தரராஜன் நடித்த
பயணம்

மனோகரா (யாழ்நகர்)
தினசரி 4 காட்சிகள்
சிவாஜி - உஷாநந்தினி
ராஜபார்ட் ரங்கதுரை
(ஈஸ்ட்மன் கலர்) [புதிய பிரதி]

கடைசி 3 தினங்கள்
ஸ்ரீதர் (யாழ்நகர்) தினசரி 4 காட்சிகள்
கமலஹாசன் - சுஜாதா நடித்த
உயர்ந்தவர்கள்

10-வது வாரம்
வின்ஸர் (யாழ்ப்பாணம்)
போன்: 466
தினசரி 5 காட்சிகள்
10-00, 1-00, 3-45, 6-45, 9-45
பைலட் பிரேம்நாத்
(ஈஸ்ட்மன் கலர்)

தினசரி 4 காட்சிகள் கடைசி 3 தினங்கள்
ராணி (யாழ். நகர்)
ஸ்ரீகாந்த் - லக்ஷ்மி
நடித்த
ஜெயகாந்தனின்
ஒரு நடிகை நாடகம் பார்க்கிருள்
டைரக்ஷன் ; A. பீம்சிங்

REGAL NOW SHOWING Daily at, 4-30, 7-00 & 9-30 p m
HEADLESS HORSEMAN
(color)
தலையில்லாக் குதிரைக்காரனின் சாகசங்கள் நிறைந்த படம்
Next Attraction
ON FRIDAY AT ELEVEN

Shanthi - (Jaffna)Phone-7642
Last few days only
10-30, 4-45, 7-00, & 9-30
3rd Glorious Week !
SEVEN NIGHTS IN JAPAN
More Suitable for Adults — Eastman Color

வெலிங்டன் (யாழ்ப்பாணம்)
தினசரி; 2-00, 6-00&9-30
சனி, ஞாயிறு: 10-00,2-00 6-00 & 9-30
எம். ஜி. ஆர். — பத்மினி
மதுரைவீரன் (புதிய பிரதி)

லிடோ (யாழ். நகர்)
போன்: 7693 தினசரி 4காட்சிகள்
விஜயகுமார் - ஸ்ரீவித்யா - தங்கவேலு
ஆசை அறுபதுநாள்

# இந்திய இழுவைப் படகுகள்

## ஈழக் கரையோரங்களில் ஆக்கிரமிப்பு

## தீவுப்பகுதி கரையோரங்களை தடைசெய்ய ஜனாதிபதிக்குக் கோரிக்கை

[யாழ்ப்பாணம்]

'எமது கடல் பிராந்தியங்களில் இந்திய மீன்பிடி இழுவைப் படகுகள் அத்துமீறி எமது மீன்பிடித் தொழிலாளர்களைப் பயமுறுத்தி அவர்களுடைய மீன்பிடி வலைகளையும் சேதம் செய்துவிட்டு தமது செல்வாக்கை நிலைநாட்டி மீன்பிடித்துச் செல்கின்றனர். இதுவிடயத்தில் தாங்கள் நேரடியாகத் தலையிட்டு உடன் நடவடிக்கை எடுத்து இந்திய இழுவைப் படகுகள் எமது கடல் எல்லைக்குள் பிரவேசிக்காமல் தடுத்துக்கொள்ள வேண்டும்'

ஜனாதிபதி திரு ஜே ஆர். ஜெயவர்த்தனவிற்கு மயிலிட்டியைச் சேர்ந்த திரு. சி. க. குருதேவர் அனுப்பியுள்ள மகஜரில் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அந்த மகஜரில் மேலும் கூறப்பட்டிருப்பதாவது:

எமது கடல் பிராந்தியங்களில் குறிப்பாக கச்சதீவுக்கு வடபகுதியும், நெடுந்தீவு நயினாதீவு கரைகளிக்கு மிக அண்மையில் அதாவது 100 யார் தூரத்தினுள் பிரவேசித்து இழுவைப் படகுகள் மூலம் தொழில் செய்வதனால் எமது கடற்தொழிலாளர்கள் எதுவிதமான மீன்பிடித் தொழில் செய்ய முடியாது மிகவும் துன்பப்படுகின்றனர். இது மட்டுமல்லாது எமது மீன்பிடித் தொழிலாளர்களையும் தாக்கிவிட்டு எமது தொழிலாளர்களுடைய வலைகளையும் அபகரித்துச் செல்கின்றனர்.

இம்மகஜரின் பிரதிகள் எதிர்க்கட்சித் தலைவர், எம். பிக்கள் ஆகியோருக்கும் அனுப்பிவைக்கப்பட்டுள்ளது.

---

"பழைய அரச ஊழியர்

## பதவிஉயர்வு பெறவேண்டிய காலத்திலிருந்தே வழங்குக"

[யாழ்ப்பாணம்]

பழைய அரச ஊழியருக்குச் சிங்களத் தேர்ச்சி அவசியமில்லை எனும் 700-ம் இலக்கத் திறைசேரிச் சுற்று நிருபத்திற்கமைய வழங்கப்படவிருக்கும் பதவி உயர்வுகளை அவர்கள் எந்நாளில் பதவி உயர்வு பெற்றிருக்கவேண்டுமோ அந்நாளிலிருந்தே வழங்கும்படிகூறி அரசாங்க எழுதுவினைஞர் சங்கம் பொது நிர்வாக உள்நாட்டமைச்சர் திரு. மொண்டேகு ஜெயவிக்கிரமாவுக்கு மகஜர் ஒன்றைச் சமர்ப்பித்துள்ளனர். அதில் கூறப்பட்டிருப்பதாவது.

'பழைய அரச ஊழியர்களின் பதவி உயர்வுமுதலானவற்றிற்கு சிங்களம் ஒரு நிபந்தனையாகக் கோரப்படக் கூடாது என விதிக்கும் 700-ம் இலக்க திறைசேரிச் சுற்று நிருபத்திற்கு முற்றிலும்முரண்பாடாக பொது எழுது வினைஞர் சேவையிலுள்ள உத்தியோகத்தர் பலருக்கு இதே காரணத்திற்காக 1971-ம் ஆண்டிலிருந்து பதவியுயர்வு மறுக்கப்பட்டு வந்தமை பற்றி எமது சங்கம் பல தடவைகள் தங்களுக்கு நேரடியாகவும், எதிர்க்கட்சித் தலைவர் மூலமாகவும் எடுத்து விளக்கியது.

மனிதாபிமானஎமது நீண்டநாட்கோரிக்கையில் நியாயத்தை ஏற்று இந்த அநீதியான நிபந்தனையை விலக்கி திறைச்சேரியின் 700-ம் இலக்க சுற்று நிருபத்திற்கமைய பதவியுயர்வுகள் வழங்கப்படுதற்கு தற்போது அமைச்சரவை முடிவெடுத்துள்ளமை வரவேற்கத்தக்கதாகும்.

ஆயினும் நடைமுறையிலிருந்து வந்த சட்டரீதியான விதிமுறைக்கு மாறாக மறுக்கப்பட்ட இப்பதவியுயர்வுகள் அமைச்சரவை முடிவு மேற்கொண்ட நாளாகிய 17-1-79 நாளிலிருந்தே வழங்கப்படவேண்டுமென அமைச்சரவை தீர்மானித்துள்ளமை எதுவிதத்திலும் நியாயமற்றதாகும்.

பதவியுயர்வு மறுக்கப்பட்டமை தவறு என ஏற்றுக்கொண்ட தாங்கள் எதேச்சையான இந்நிபந்தனை இல்லாமல் இருந்திருந்தால் அவர்கள் எந்நாளில் பதவியுயர்வினைப் பெற்றிருப்பார்களோ அந்நாளிலிருந்து அதாவது கடந்தகால நடைமுறை வலுவுள்ளதாக இப்பதவியுயர்வுகளை அவர்களுக்கு வழங்குவதே நீதியானதாகும்.

தம்மைவிட அனுபவத்திலும் சேவை மூப்பினாலும் குறைந்த ஏனையவர்கள் தம்மிலும் சேவை மூப்புடையவர்களாகக் கருதப்படுவதும் அவர்களது கீழமைந்த உத்தியோகத்தராக இவர்கள் சேவையாற்ற நிர்ப்பந்திக்கப்படுவதும் எந்தவொரு விதத்திலும் நியாயமானதாகாது

எனவே தமது சுய உழைப்பால்பதவியுயர்விற்குத் தம்மை உரித்தானவர்களாக்கிக் கொண்ட இப்பகுதி அரசு உத்தியோகத்தருக்கு பதவியுயர்வு கிடைத்திருக்க வேண்டிய திகதியிலிருந்துபதவியுயர்வினை வழங்கி அவர்களது சம்பள நிலுவை முதலானவற்றையும் பெற்றுக் கொடுக்குமாறு வேண்டிக் கொள்கிறோம்.'

இம்மகஜரின் பிரதிகளை இணைந்த சேவைகள் பணிப்பாளருக்கும், தாபனப் பணிப்பாளருக்கும், எதிர்க்கட்சி தலைவர் திரு. அ. அமிர்தலிங்கத்துக்கும் மேற்படி சங்கம் அனுப்பிவைத்துள்ளது [கி-அ]

---


## மரண அறிவித்தல்

### திரு. மயில்வாகனம் நல்லையா

சுன்னாகம் தெற்கு மயில்வாகனம் நல்லையா (Electrical Foreman) தான்ஸானியாவில் 16-2-79-ந் திகதி அகால மரணமானார், இவர் மயில்வாகனம் தம்பதிகளின் அன்புமகனும், லலிதாம்பிகையின் அன்புக் கணவரும், உடுவில் கிழக்கு இராமநாதன் தம்பதிகளின் அன்பு மருமகனும், விவேகானந்தனின் அன்புத் தந்தையும், குணரத்தினம் (தபாற்கந்தோர், திருகோணமலை) கனகலிங்கம், சிவலிங்கம் [U K.] ஆகியோரின் அன்புச் சகோதரனும், யோகராணியின் அன்பு மைத்துனரும் ஆவார். அன்னாரின் பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக 27-02-79 செவ்வாய்க்கிழமை பிற்பகல் 4-00 மணியளவில் சுன்னாகம் தெற்கு இல்லத்திலிருந்து கொத்தியாலடி மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

1766


---

## வேலைநிறுத்தத்தை கைவிட ஆளுநர் கோரிக்கை

சென்னை, பெப். 26

தமிழ் நாட்டில் நடைபெற்றுவரும் கல்லூரி ஆசிரியர்களினதும் ஆசிரியைகளின் உண்ணாவிரதத்தையும் கைவிடும்படி தமிழக ஆளுநர் பிரபுதாஸ் பட்வாரி இன்று கேட்டுக் கொண்டார்.

இன்றும் வேலைநிறுத்தம் செய்த ஆசிரியர்கள் பல இடங்களிலும் கைது செய்யப்பட்டனர். 0 0

டில்லியில்
காமராஜர் சிலை

புதுடில்லியில் பிரபல்யமான டூப்ளெக் வீதியில் காமராஜரின் சிலை வைக்கப்படவிருக்கிறது.

0 0 0

கருணாநிதி
குற்றச்சாட்டு

தமிழக அரசின்மீது எதிர்க்கட்சியான தி. மு. கழகம் கொண்டுவந்த நம்பிக்கையில்லாப் பிரேரணை மீதான விவாதத்தை முடித்து வைத்து தலைவர் மு, கருணாநிதி இன்று சட்ட மன்றத்தில் பேசுகையில் அரசின்மீது அடுக்கடுக்காகக் குற்றச்சாட்டுக்களைத் தெரிவித்தார்.

விவாதத்துக்கு முதல்வர் எம். ஜி. ஆர். பிற்பகலில் பதிலளித்தார்.

---


### யாழ்ப்பாண மாநகராட்சி மன்றம்

## அறிவித்தல்

25-2-1979ம் திகதி ஞாயிற்றுக்கிழமை வெளியான 'ஈழநாடு' வாரமலரில் வெளியிடப்பட்ட கேள்வி அறிவித்தலில் உள்ள கீழ்வரும் விடயம் தவறுதலாகச் சேர்க்கப்பட்டமையால் இரத்துச் செய்யப்பட்டுள்ளதென்பதை இத்தால் தெரிவித்துக்கொள்கிறேன்.

(ஈ) லிடோ தியேட்டருக்கு முன்பாக இரு கடைகள் அமைத்தல்.

க. சிவஞானம்,
விசேட ஆணையாளர்,
யாழ். மாநகராட்சி
மன்றம்.

மாநகராட்சி மன்ற
அலுவலகம்,
யாழ்ப்பாணம்.
26-2-1979 1757


---

## பிரதிப் பொலிஸ்மாஅதிபர் திடீர் யாழ். விஜயம்

(யாழ்ப்பாணம்)

பிரதிப் பொலிஸ் மா அதிபர் திரு. எல். சி. டி. ஹேரத் யாழ்ப்பாணம் வந்துள்ளார் காங்கேசன்துறைப் பொலிஸ் அத்தியட்சகரையும். யாழ் பொலிஸ் அதிபரையும் அவர் அழைத்து, யாழ். ரயில்நிலையத்தில் நடந்த கொள்ளை பற்றியும், சென்ற சில தினங்களாக யாழ்ப்பாணப் பகுதியில் மீண்டும் அதிகரித்துவரும் கொள்ளைச் சம்பவங்கள் பற்றியும் ஆராய்ந்ததாகத் தெரிகிறது.

யாழ். ரயில் நிலையத்தில் சென்ற சனிக்கிழமை பிற்பகல் நடந்த சுமார் 4,000 ரூபாய் கொள்ளை சம்பந்தமாக விசாரணைக்காகப் பொலிஸாரால் கூட்டிச் செல்லப்பட்ட 26 பேர், யாழ். ரயில்நிலையத்தைச் சேர்ந்த எவராலும் அடையாளம் காட்டாததால் வீட்டுக்குச் செல்ல அனுமதிக்கப்பட்டதாகத் தெரிகிறது.

### பல்லாயிரம் போயிருக்கலாம்

யாழ் ரயில் நிலையத்தில் நடந்த கொள்ளையின்போது கணக்காளர் பிரிவு அதிபர் திரு ஸ்ரான்லி அர்னோல்ட், தமது அறைக்குள் சென்றிருந்தால் கொள்ளையர் அறையினுள் சென்று இரும்புப்பெட்டியில் இருந்த சுமார் நாற்பதாயிரம் ரூபாயைக் கொள்ளையடித்துச் சென்றிருக்கலாம் என்றும் அறையுள் செல்லாது வாசலில் நின்று தடுத்ததால் பெருந்தொகைப்பணம் காப்பாற்றப்பட்டு விட்டதென்றும் ரயில்வேப் பகுதியினர் தெரிவித்தனர்.

---

நான்கு தினங்களாக நடந்த

## பண்ணை ஆஸ்பத்திரி ஊழியர் வேலை நிறுத்தம் கைவிடப்பட்டது

(யாழ்ப்பாணம்)

சம்பளம் வழங்கப்படாததினால் கடந்த நான்கு தினங்களாக கடமைகளை பகிஷ்கரித்த யாழ்ப்பாணம் பண்ணை மார்புநோய் சிகிச்சை நிலைய ஊழியர்களுக்கு நேற்று நண்பகல் 12 மணிக்கு சம்பளம் வழங்கப்பட்டதால் பகிஷ்கரிப்பைக் கைவிட்டு வழக்கம்போல கடமையில் ஈடுபட்டனர்.

பண்ணை மார்புநோய் சிகிச்சை நிலையத்தைச் சேர்ந்த சுமார் 25 ஊழியர்கள் கடந்த நான்கு தினங்களாகக் கடமை செய்ய மறுத்துவந்தனர். இதனால் சிகிச்சை பெறவந்த நோயாளிகள் ஏமாற்றத்துடன் திரும்பிச்செல்ல நேர்ந்தது.

இம்மாதம் 23-ந் திகதி வழங்கப்படவிருந்த பெப்ரவரிமாதச் சம்பளம் இன்னும் வழங்கப்படாதனாலேயே இவ் ஊழியர்கள் வரவுப்புத்தகத்தில் கையெழுத்திட்டபின் வேலை எதுவும் செய்யாமல் கடமை நேரம் வரை ஆஸ்பத்திரியில் இருந்துவிட்டு சென்றனர்.

இதனால் வவுனியா, மன்னார், முல்லைத்தீவு, மாங்குளம் கிளிநொச்சி போன்ற தூர இடங்களிலிருந்துவந்த நூற்றுக்கணக்கான நோயாளிகள் ஏமாற்றத்துடன் திரும்பிச் சென்றனர் அவசர சிகிச்சை பெறவேண்டிய நோயாளிகள் கூட சிகிச்சை பெறமுடியாமல் போய்விட்டனர்.

உதவி டாக்டர், கதிரியக்க பொறியியலாளர்கள், விகிதர்கள் தாதிகள், கங்காணிமார், மற்றும் சிற்றூழியர்கள் கடமையை செய்ய மறுக்கும் போராட்டத்தில் ஈடுபட்டிருந்தனர்.

கச்சேரியில் இருந்து சம்பளத்தைப் பெற்றுவரும் வாகனம் பழுதடைந்துவிட்டதாலேயே இந்தஊழியர்களுக்கு சம்பளம் வழங்கப்படவில்லையென ஆஸ்பத்திரி வட்டாரங்கள் தெரிவித்தன.

முன்பு தனிப்பட்டவர்களின் வாகனத்தை வாடகைக்கு அமர்த்தி கச்சேரியில் இருந்து சம்பளப்பணம் எடுத்துவரப்பட்டதாகவும் அதற்கான அலவன்ஸ் வழங்கப்பட்டதாகவும் ஆனால் 3-1-79 முதல் தனிப்பட்ட வாகனத்திற்கான அலவன்ஸ் வழங்கப்படமாட்டாதென அறிவிக்கப்பட்டதாகவும் அவ்வட்டாரங்கள் தெரிவித்தன

பண்ணைஆஸ்பத்திரியிலுள்ள வாகனம் பழுதடைந்து விட்டதாலும் தனிப்பட்ட வாகனத்தை வாடகைக்கு அமர்த்துவதற்கு தடை விதிக்கப்பட்டதாலும் குறிப்பிட்ட திகதியில் பண்ணை ஆஸ்பத்திரி ஊழியர்களுக்கு சம்பளம் வழங்கப்படவில்லையென்றும் அவ்வட்டாரங்கள் தெரிவித்தன

(கொ-நி)

---

## இந்திராவின்...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

சுருளை சுக்ளாவும் சஞ்சய் காந்தியும் எரித்ததாகத் தெரிவிக்கப்பட்டிருந்தது.

இருவரையும் குற்றவாளிகளாகக் கண்ட நீதிபதி தண்டனை விபரங்கள் நாளைவெளியிடப்படுமென அறிவித்தார்.

---

## கச்சதீவுக்கு...

[1ம் பக்கத் தொடர்ச்சி]

அனுமதிக்கப்படமாட்டாது.

வெளிநாட்டுச் சாமான்களை சொந்தப் பாவிப்புக்குத்தவிர, மேலதிகமாகக் கொண்டு செல்ல அனுமதிக்கப்படமாட்டாது.

ஒரு வாசனைச் சவர்க்காரமும், ஒரு துணி கழுவும் சவர்க்காரமும் மட்டுமே கொண்டு செல்லலாம்.

கராம்பு, ஏலக்காய், சாதிக்காய் போன்ற பொருட்கள் கொண்டுசெல்வதற்கு முற்றாகத்தடைவிதிக்கப்பட்டுள்ளது.

கச்சதீவிலிருந்து திரும்பிவரும் யாத்திரீகர்கள், சுங்கப் பரிசோதனைக்கு வழமைபோல் உட்படுத்தப்படுவார்கள் (கஅ)

---

## சிகரெட்கொடுக்க மறுத்தவருக்கு கத்திக்குத்து

[யாழ்ப்பாணம்]

நாடக விழாவொன்றில் ஒருவர் சிகரட் கொடுக்க மறுத்ததினால் 5 தடவை கத்தியால் குத்தப்பட்டு யாழ். பெரிய ஆஸ்பத்திரிகள் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

தொல்புரத்தைச் சேர்ந்த சசவனை பூபாலன் என்பவர் நாடகம் பார்த்துக்கொண்டிருந்தபோது சந்தேக நபரான வைரவன் செல்வராசா வந்து அவரிடம் 'சிகரட்' கேட்டதாகவும் அவர் இல்லையென்று கூறவே 5 தடவை கத்தியால் குத்தியதாகவும் விசாரணையில் தெரியவந்துள்ளது.

காயமடைந்தவர் உடனடியாக யாழ். பெரியாஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டார்.

சங்கானைப் பொலிசார் இச்சம்பவம் தொடர்பாக விசாரணை செய்து வருகின்றனர்.

(கை-அ)

---

இப்பத்திரிகை 'ஈழநாடு' லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேற்கு வீதி 63-ம் இலக்க அச்சகத்தில் 1979-ம் ஆண்டு பெப்ரவரி மாதம் 27-ந் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Registered as a Newspaper at the Geneial PostOffice The Eelanaadu P B No: 49, Telegram: Eelanaadu, Telephone: 389, Registered as a News Paper in Sri Lanka.-